உ

கடவுள்துணை,

அதிவீரராமபாண்டியர்

திருவாய்மலர்ந்தருளிய

நைடதமூலமும்

திருத்தணிகை- கந்தப்பையர்குமாரர்

சரவணப்பெருமாளையராலும்

இவர் - குமாரர்

கந்தசாமிஐயராலும்

செய்யப்பட்டபதவுரையும்.

களத்தூர்தமிழ்ப்புலவர்

வேதகிரிமுதலியாரால்

செய்யப்பட்டகருத்துரையும்

பலவிலக்கணமேற்கோளுமாகிய

இஃது

சரவணபுரம்

சண்முகமுதலியாரவர்களா

பார்வையிடப்பட்டு.

புரசபாக்கம்

ஏழுமலைப்பிள்

விவேகவிளக்க

பதிப்பிக்

188

விருத்தஅகராதி

முற்றிற்று.

———(*)———

முற்றிற்று.

உ

கடவுள்துணை.

நைடதமூலமும் உரையும்.

பாயிரம்.

விநாயகர்வணக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தழைவிரிகடுக்கைமாலைத் தனிமுதற்சடையிற்சூடுங்
குழவிவெண்டிங்களிற்கோட் டதுகுறையென்றெண்ணி
புழைநெடுங்கரத்தாற்பற்றிப் பொற்புறவிணைத்துநோக்கு
மழைமதக்களிற்றின்செய்ய மலரடிசென்னிவைப்பாம்.

இதனதுபதப்பொருள்.

தழை-செழித்த—விரி-மலர்ந்த—கடுக்கை-கொன்றைமலர்களாலாகிய—மாலை மாலையையுடைய—தனி- ஒப்பில்லாத—முதல் - பரமசிவன்—சடையில்-சடையினிடத்தில்—சூடும்- தரிக்கப்பட்டிருக்கிற—குழவி-இளமையாகிய—வெள்-வெள்ளிய—திங்கள்-சந்திரனை—இற்ற - ஒடித்த—கோட்டது (தன்)கொம்பினது—குறையென்று-சேஷமென்று—எண்ணி-நினைத்து—புழை - துளைபொருந்திய—நெடும்-நீண்ட—கரத்தால்-துதிக்கையினால்—பற்றி-பிடித்து—பொற்பு - அழகானது—உற-பொருந்த—இணைத்து (அதிற்) பொருத்தி—நோக்கும்-பார்க்கின்ற—மழை- மழையைப்போலும்—மதம்-மதத்தையுடைய—களிற்றின் - யானைமுகவிநாயகமூர்த்தியினது—செய்யமலர் - செந்தாமரைமலர்போலும்—அடி-திருவடிகளை—சென்னி - சிரசின்மேல்—வைப்பாம் (யாம்) அணிந்துகொள்ளுவாம்—என்றவாறு.

தழைவிரிகடுக்கை என்றது, தழைகள்விரிந்தகடுக்கை எனினும் பொருந்தும்; தழைதலாகியகாரணத்தால் தழைஎன்றாயிற்று, மாணிக்கவாசகர் திருவாய்மலர்ந்தருளிய (குவலயானந்தசூத்திரம்) வழிபடுதெய்வவணக்கஞ்செய்து- மங்கலமொழிமுதல்வகுத்தெடுத்துக் கொண்டிலக்கணவிலக்கிய மிடுக்கணின்றி யினிது.

* யாப்பருங்கலம்) கழிநெடிலடி [illegible] லாவைவிர [illegible]-வருவனபிறவும் வகுத்தனர்கொளலே.

முடியுமே-இவ்விலக்கணத்தினுல் கடவுள்வணக்கங் கூறினர் யாம் என்னுமெழுவாய் கிஞ்சிகின்றது வைப்பாம் என்றது, பயநிலை-அடி யென்றது-செயப்படுபொருள், தனூழ - விரி- என்கிறபெயரெச்சத்தொகைகளிக்கிக் கொன்றைலொன்கிற வினை முதல்பெயர்கொண்டனவாகும்.

மலரடிசென்னிவைப்பாம் என்று, தன்மைப்பன்மைவினைமுற்று கத்தம்மைப்புகழ்ந்து கூறியதற்கு இலக்கணமென்னனமெனின், * முனைபுனைகேவகன்முனிந்தார்ப்பதுபோற் சடறக்கற்ற கல்வியாற்றலாற் றன்னைபுகழத் தகுமெனச்சாற்றினர், என்றகனலறிக. இற்றகோடென்றது, விநாயகர் தம்மாலொடிக்கப்பட்டகோடென்றருத்தமாம். இதற்கிலக்கியமென்னனமெனின், கந்தபுராணம், கெசமுகனுற்பத்திப்படலம் (உசகூ-ம, பாடல்) (உசள-ம், பாடல்.)

நின்றவன்றன்னைநோக்கி நெடியபல்படைகளேவிச்
சென்றிவன்றன்னைக்கொல்லாச் சிவனருளவரத்தின்சீரா
லின்றினிச்செய்வதென்னென் றிறைவனையுன்னியெந்தை
தன்றிருக்கோட்டிலொன்று தடக்கையின்முறித்துக்கொண்டான்.

தடக்கையிலேந்துங்கோட்டைத் தந்திமாமுகன்மீது
விடுத்தலுமனையன்மார்பை வெய்தெனக்கீண்டுபோகி
யுடற்படிமிசையேவீழ்த்தி யொல்லையிலோடித்தெண்ணீர்க்
கடற்படிந்தமலன்மைந்தன் கரத்தில்வந்திருந்ததன்றே.

இச்செய்யுட்களில் கெஜமுகனைக் கொல்லக் கோட்டைஒடித்தாரென்றது, புராணசத்தாத்பர்யம். இக்கருத்தறியாதார் பாரதமெழுதக்கோட்டைஒடித்தாரென்று உரைவரைந்திருக்கின்றார். அவர் இந்நூலறியார் போலும். மழவு-என்றதும், ஒருபொருட்கிளவி (சூத்திரம்) மழவுங்குழவுமிளமைப்பொருள்,பொற்பு-என்றது அழகு. பொற்புப்பொலிவுஇவை ஒருபொருட்கிளவியாம். (சூத்திரம்) பொற்பேபொலிவு (என்றதனலறிக) பிறையைக்கொம்பின்குறையென்று மயங்கினமையால் (மயக்கவலங்காரம்.)

(கருத்துரை) சிவன்முடியிலிருந்த பிறையைஒடித்தக் கொம்புக்கிணையாக்கும் விநாயகரை வணங்குவோமென்பதாம் (க)

* மாணிக்கவாசகர் * தொல்காப்பியனார்தம் தொல்காப்பியம்.

உ

கடவுள் துணை.

சிறப்புப்பாயிரம்.

நிலவுபொழிதனிக்கவிகைநிடதர்கோன் புகழ்ச்சரிதநெடுநீர்வைப்பிற் புலவர்களியமுதொழுகுபுதுமொழி கூட்டுணைத்தமிழாற்புனைதல் செய்தான், வலனுயர்த்தவண்ணலஞ்சேல் வான்சென்றுபொற்கோட்டிமயவரையிற்றீட்டி யலர்தலைமாநிலம்புரக்கு மதிவீரராமனிகலரசரேறே

(இ-ள்) இகல்-பகைத்த—அரசர்-மன்னராகிய (யானைகளுக்கு)—ஏறு-ஆண்சிங்கம்போன்றவனாகிய—வலன்-வெற்றியினால்—உயர்த்த-உயர்த்தப்பட்ட—அண்ணல்-பெருமைபொருந்திய—அம்-அழகிய—சேல்-மீனக்கொடியை-வான்-ஆகாயத்தை—சென்று அளாவிய—பொன்-பொன்னாகிய—கோட்டு-சிகரத்தையுடைய—இமயவரையில்-இமயமலையினிடத்து—தீட்டி-(தனக்குரியவெல்லைக்கல்லாக) வெழுதி—அலர்-பரந்த-தலை-இடத்தையும்-மா-பெருமையையுமுடையநிலம்பூமியை—புரக்கு-காக்கின்ற—அதிவீரராமன-அதிவீரபாண்டியராஜனானவன்—நிலவு-சந்திரிகையை-பொழி-பொழிகின்ற-தனி-ஒப்பற்ற-கவிகை (முத்துக்குடை)-யினையுடைய—நிடதர்கோன்-நளமகாராஜனது—புகழ்-புகழ்ச்சிபொருந்திய—சரிதம்-சரித்திரமாகிய—களி-களிப்பைத்தருகிற—அமுது-அமிழ்தத்தை—நெடுநீர்-கடலாற்சூழப்பட்ட—வைப்பில்-பூமியிலுள்ள—புலவர்-புலவரானவர்கள்—கூட்டுண்டுகொள்ளும்படியாக—ஒழுகு-(அவ்வமிழ்தம் பெருகுகின்ற) புதுமொழி*புதியகாவியத்தை—தமிழால் தமிழ்மொழியினாலே—புனைதல்செய்தான்-அலங்கரித்துப் பாடினான்-எ-று. (குவலயானந்தம்) சேயமுடனேயிருக்கும்பொருளாய்வினைத்து மடக்கிக்காட்டுதல் பாயிரமென்றுபகரப்படுமே, ஒருநான்முகத்தி னுரைத்திடும் பாயிரஞ்-சிறப்பெனநல்லோர்செப்பினர்க்கம-எனவும் கூறியவாறு சிறப்புப்பாயிரங்கூறினர் (இதுவேகதேசவுருவகவணி) (கருத்து) அதிவீரராமபாண்டியராஜனானவன் நளமகாராஜனது சரித்திரத்தைத் தமிழினாற்பாடினனென்பதாம்.

சிறப்புப்பாயிரம்-முற்றிற்று.

* ஸ்ரீ தண்டியலங்காரம்) அறமுதனான்குந் நுதலியவுறைபாலுடையதாகாப் பியமென்று கருதப்படுமே.

உ

கடவுள் துணை.

நாட்டுப்படலம்.

கலித்துறை.

கருவிமாமழைக்கலை மகளுருவெனவிளங்கி
யிருவிசும்பிடைப்படர்ந்து சென்றினமணிகொழிக்கும்
பரவைவெண்டிரைமேய்ந்துயர் பனிவரையுயிர்த்த
வுருவவோடரித்தடங்கணாளுருக்காட்டிமீண்ட.

(இ-ள்) கருவி-உலகத்திற்குத்துணைக்காரணமாகிய — மா-பெருமை பொருந்திய — மழை-மேகங்களானவை — கலைமகள் சரஸ்வதியினது — உருவென-வடிவம்போல — விளங்கி (வெண்மையாக) விளங்கு — இரு-பெரிய-விசும்பிடை-ஆகாயத்தினிடத்தே — படர்ந்து-பரந்து — சென்று-போய — இனம்-இனமாகிய — மணி-இரத்தினங்களை — கொழிக்கும்-கொழிக்கின்ற — பரவை-கடலினது — வெள் - வெள்ளிய — திரை அலைகளையுடைய(நீரை)மேய்ந்து-குடித்து — உயர்-உயர்ந்த — பனிவரை-மலையரசனால்,உயிர்த்த,புதல்வியாத்தரப்பட்ட — உருவ (காதுகளுக்கு)நேராக — ஓடு-ஓடுகின்றதடம்,விசாலமாகிய-காணா-கண்களையுடைய (பார்வதியினது உரு-கருநிறத்தை — கொடு-பெற்று — மீண்ட, திரும்பின-எ-று, இது முதல்(உ)பாடலும்முச்சிறப்பு, (இது உபமானம், உபமேயம், விரிந்திருக்கையால்விரியுவமையணி) (கருத்து மேகங்களானவை சரஸ்வதி வடிவம்போலத்தோன்றிக்கடற்சலத்தையுண்டுபார்வதிவடிவம்போலத் திரும்பின-என்பதாம், (க)

அன்னங்கண்படுதண்பணை நிடதநாடளிக்கு
மன்னர்மன்னவன்மண்டமர் கடந்தவொள்வேலின்
மின்னியாங்கவன்முரசென விண்ணிடையதிர்ந்து
பொன்னங்குன்றின்மேலவன் கொடைபோன்மெனப்பொழிந்த,

(இ-ள்.) அன்னம்,அன்னங்களானவை — கண்படு, தூங்குகின்ற — தண், குளிர்ச்சிபொருந்திய — பணை, கழனிகளையுடைய — நிடதநாட்டு-நிடததேசத்தை — அளிக்கும் காக்குகின்ற — மன்னர் அரசர்களுக்கு — மன்னவன், அரசனாகிய (நளனது), மண்டு, நெருங்கிய-அமர், போரை — கடந்த, முடித்த — ஒள், ஒள்ளிய — வேலின் வேல்போல் — மின்னி, மின்னுதல்செய்து — அவன், அவனது — முரசென-முரசம்போல — விண்ணிடை-ஆகாயத்தினிடத்து — அதிர்ந்து-சத்தித்து — பொன்-பொன்னாகிய-அம், அழகிய — குன்றின்மேல் - இமயமலையின்மேல் — அவன், அவனது — கொடை-ஈகையை — போன்மென-ஒக்குமென்றுசொல்லும்படியாக — பொழிந்த (அம்மேகங்கள்(நீரைச்சொரிந்தன — எ-று,

○(யாப்பு) பருவகால,நெடிலடிநான்காய்நிகழ்வதுகலித்துறை(ஆக்கு ஆகச இதுஉவமானக்கூறுதலால்உவமையணி (கருத்து)அந்தமேகங்க

ளானவைகளனது வேலைப்போலமின்னி அவன்பேரிகைபோலச்சத்தித்து அவன்கொடையைப்போல நீரைச்சொரிந்தன-எ-ம். (உ)

விலகிவில்லுமிழ் விரிகதிர்மணிவான்றிப்
பொலன்முகட்டுயர்பொன்னெடுங்குன்றின்வீழருவி
குலவுவெண்டிரைக்குரைகடலுடுத்தபார்மடந்தை
யலர்முலைத்தலைத் துயல்வருமாரமொத்துளதால்.

(இ-ள்,) உயர்மலைகளிலுயர்ந்த—நெடு-நெடிய—பொற்குன்றின் இமயமலையின்மேல்—பொலன்-அழகிய—முகட்டு. சிகரத்திலிருந்து-விலகி-இடைவிட்டு—வில்-ஒளியை—உமிழ் - வீசுகின்ற—விரி-விரிந்த—கதிர்-கிரணங்களையுடைய—பல- பலவகைப்பட்ட—மணி - முத்துக்களையும்—வான்றி-வாரிக்கொண்டு—வீழ்-வீழ்கின்ற, அருவிவெள்ளமானது—குலவு-வளைவாகிய—வெள்- வெள்ளியாகிய—திரை-அலைகளையுடைய—குரையொலிக்கின்ற,கடல்கடலாகிய ஆடையை)உடுத்தமருங்கிற்சூழ்க்கொண்டிருக்கிற—பார்மடந்தையை-பூமிதேவியினுடைய, அலர்- அடிபரந்த—முலைத்தலை-அம்மலையாகிய முலையினிடத்து-துயல்வரும்-புரளுகின்ற—ஆரம்-முத்துமாலையை—ஒத்துளது-ஒத்திருக்கின்றது—எ-று. (இது உறுப்புறுப்புக்கலவையணி (கருத்து) மலைவெள்ளமானது பூமிதேவியினது முலையின்மீதணிந்தமுத்துமாலையையொத்திருக்கின்றதென்பதாம் இது முதல்-பாடலாற்றுச்சிறப்பு. (௩)

வேழவெண்மருப்பெறிந்துவெண்ணித்திலம்வரன்றிக்
காழகிற்றுணிசந்தொடுமையரிக்கொண்டு
கேழுழைச்செழுங் குங்குமத்தடஞ்சினைசாடி
யாழ்திரைக்கட லகடுகிண்டொழுகியதன்றே,

(இ-ள்,) வேழம்-யானைகளுடைய—வெள்-வெள்ளிய—மருப்பு- கொம்புகளை—எறிந்து-வீசிக்கொண்டும்—வெள்-வெள்ளிய—நித்திலம்-முத்துகளை—வரன்றி-வாரிக்கொண்டும்—காழ்-வைரம்பொருந்திய—அகில்-அகின்மரங்களினுடைய—துணி-துண்டங்களை சந்தொடு- சந்தனமரங்களோடு-மையரிக்கொண்டு-சேர்த்துக்கொண்டும்—கேழ்-வழுவழுப்பாகிய—உழை-உழையையுடைய—செழு-செழிய—குங்குமம்- குங்குமமரங்களின்—தட-விசாலமாகிய—சினை-கிளைகளை—சாடி-முறித்துக்கொண்டும்—ஆழ்-ஆழ்ந்த—திரை- அலைகளையுடைய—கடல்-கடலினது—அகடு-வயிற்றை—கிண்டி-கிழித்து—ஒழுகியது அவ்வெள்ளம்) சென்றது—எ-று. அன்று அசை (தண்டியலங்காரம் குணகம்பலபாட்டொருவினைகொள்ளுமென்றதனுவிதுகுளகவணி (கருத்து) அந்தவெள்ளமானது யானைத்தந்தத்தின்முத்துகளையும் அகிற்றருவையுஞ்சந்தனத்தருவையுங்குங்குமத்தருவையுமுறித்துச்சமுத்திரத்துட்சென்றதென்பதாம (௪)

கங்கையென்றுலக மேத்தியகடவுண்மாநதிவெண்
சங்குகுலங்களங் கலிழியநடம்பணைதவழ்ந்து

பொங்குயிர்த்தபூந் தடத்துலாய்க்குளம்பலநிரப்பி
யங்கண்மாநிலத்தமுதெனப்பரந்ததையன்றே

(இ-ள்.) கங்கையென்று-கங்காநதியென்று-உலகுஉயர்ந்தோரால்—ஏத்திய-துதிசெய்யப்பட்ட—கடவுள-தெய்வத்தன்மைபொருந்திய—மா-பெரிய—நதி-நதியானதுவெள-வெள்ளிய—சங்கு-சங்குகளானவை—சூல்-சூலினாலே—உளைந்து-வருந்திய—அலறிய-இரையும்படியாக—தடம்-விசாலமாகிய—பணைகழனிகளிலே—தவழ்ந்துஉலர்ந்து—தொங்குவாசனையை—உயிர்த்த-வீசுகின்ற—பூமலர்களையுடைய—தடாகங்களில்—உலாய-திரிந்து—பல-பலவகைப்பட்ட—குளம்-குளங்களையும்—நிரப்பி-நிறைத்து—அங்கண்-அழகியவிடத்தையுடைய—மா-பெரிய—நிலத்து-பூமிக்கு—அமுதென-அமிர்தமென்றுசொல்லும்படியாக—பரந்தது-பரவிற்று—எ-று, ஐசாரியை அன்று-ஏ-அசைகள் இது உவமையணி(கருத்து.)நதியானது கழனிகளையுந்தடாகங்களையுங் குளங்களையு நிரப்பிப்பூமிக்கு அமிர்தமாகப்பரவியதென்பதாம். (௯)

ஒழுகுதீம்புனல் சிறைசெய்யோதையுமுழுநர்
குழுவின்கம்பலையுமுழக்கியர்குரவையினார்ப்புங்
கழனிவாழ்கென வாழ்த்திமுளைவித்துநர்கலிப்பு
மழைமுழக்கொடு மாறுகொண்டொலித்தனமாதோ

(இ-ள்.)ஒழுகு-பெருகியோடுகின்ற—தீம்-மதுரம்பொருந்திய, புனல்-நீரை—சிறைசெய்யும் கரைகோலித்தடுத்தற்கணுண்டாகின்றவோதையும்-ஓசையும்—உழுநர்-உழுகின்றவருடைய—குழுவின்-கூட்டத்தினது-கம்பலையும் ஓசையும்-உழக்கிய-களையெடுத்து குரவையின்-குரவைக்கூத்தினது ஆர்ப்பும்-ஓசையும்—கழனி-வயல்களானவை—வாழ்கென, வாழ்கவென்று வாழ்த்தி—முளைநெல்லுமுளைகளை—வித்துநர், விதைக்கின்றவருடைய, கலிப்பு-மோசையும்—மழைமேகத்தினது—முழக்கொடு,ஓசையுடனே—மாறுகொண்டு, பகைமைகொண்டு—ஒலித்தன, முழங்கின—எ-று-மாதுஓ அசைகள் இது உவமையணி கருத்து அணைகட்டுதலாலுண்டாமோசையுமுழுகின்றவோசையுங்களைபிடுங்குவார்குரவைக்கூத்தோசையுமநெல்விதைக்கின்றவரோசையு மழைமுழக்கத்தோடு மாறுகொண்டன என்பதாம் இதுமுதல்(௫)பாடல், சிறப்பு (௰)

வள்ளவாய்ச்செழுங் கமலத்தின்வண்டு பண்மிழற்று
மள்ளலங்கருஞ்சேற்றிடையாமைகண்படுக்கும்
பள்ளநீர்ச்செழும்பணைதொறும்பணிலமுக் குளிக்குங்,
கள்ளுலாமலர்ப் பொதும்பரிற்களிமயிலகவும்

இ-ள். வண்டுகளானவை—வள்ளம், கிண்ணம்போன்ற—வாயையுடைய — செழும்செழிய —கமலத்தில் தாமரைமலர்களிலே—பண்-இசைகளை —மிழற்றும்-பாடிக்கொண்டிருக்கும் — ஆமை, கூர்மங்களானவை அள்ளல்-சேறு-ஆகிய—கரும்-கரிய—சேற்றிடை-சேற்றின்கண்—கண்படுக்கும் தூங்கிக்கொண்டிருக்கும்—பணிலம்-சங்குகளானவை—பள்ளம்-தாழ்வாகிய—நீர்-நீரையுடைய—செழும்-செழிய—

பணைதோறும்-கழனிகளிலெல்லாம்—முத்து-முத்துகளை—உயிர்க்கும்-சொரியும்—களி-களிப்பையுடைய—மயில்-மயில்களானவை—கள்-தேனைது—உலா-பெருகுகின்ற—மலர்-மலர்களையுடைய—பொதும்பரில்-சோலைகளிலே—அகவும்-ஆடிக்கொண்டிருக்கும்—அம்-சாரியை—எ-று. (கருத்து வண்டுகள் தாமரையிற்றூங்கும்-ஆமைகள்சேற்றிலே நித்திரைசெய்யும், சங்குகள கழனிகளில் முத்துக்களைச்சொரியும்-மயில்கள சோலைகளிலாடும் எ-ம் (பணிலம் சலஞ்சலம்) (எ)

பணையைவாய்த்தவழ்பணிலங்களுயிர்த்தவெண்முத்துங்
கண்ணுடைக்கரும்பீன்றவெண்முத்தமுங்கமழுந்
தண்ணந்தாமரைசொரிந்தவெண்முத்தமுந்தயங்கி
வெண்ணிலாக்கதிர்விரித்தலிற்குமுதவாய்விள்ளும்,

(இ-ள்) பணையைவாய்கழனிகளிடத்து—தவழ்-தவழ்கின்ற—பணிலங்கள்-சங்குகளால்—உயிர்த்த-தரப்பட்ட—வெள்-வெள்ளிய—முத்தும்-முத்துக்களும்—கண்-கண்ணுக்களை—உடை-உடைய—கரும்பு-கரும்புகளால்—ஈன்ற-தரப்பட்ட—வெள்-வெள்ளிய—முத்தமும்-முத்துக்களும்—கமழும்-பரிமளிக்கின்ற—தண்-குளிர்ச்சிபொருந்திய—அம்-அழகிய—தாமரை-தாமரைமலர்களால்—சொரிந்த-தரப்பட்ட—வெள்-வெள்ளிய—நிலா-சந்திரனது—கதிர்-கிரணங்களை—விரித்தலின்-பரப்புதலினாலே—குமுத-அல்லிமலர்களானவை—வாய்விள்ளும் (சந்திரோதயமில்லாதகாலத்திலும்மலரும்-எ-ம்) இதுகாட்சியணி (கருத்து) சங்கின் முத்துக்களும் கரும்பின்முத்துக்களும் தாமரைமுத்துக்களும் கிரணங்களைவிரித்தலால் அல்லிமலர்கள் மலரும்—எ-று. (அ)

விழுந்தவஞ்சிறைவண்டினமிதிப்பமெல்லரும்பு
கிழிந்துவார்தருதேறலுங்கிளர்சினைப்பலவின்
பழங்கனிந்துவீழ்தேறலும்பழனங்கடோறும்
வழிந்துபாய்தலின்வானுறவளர்வனசெந்நெல்,

(இ-ள்) விழுந்த- மேல்) விழுந்த—அம்-அழகிய—சிறை-சிறைகளையுடைய—வண்டு-வண்டுகளின்—இனம்-கூட்டங்களானவை—மிதிப்ப-துவைக்க—மெல்-மெல்லிய—அரும்பு-அரும்புகளானவை—கிழிந்த-கிழிய—வார்தரு (அவைகளிலிருந்து) ஒழுகுகின்ற—தேறலும்-தேனும்—கிளர்-விளங்குகின்ற—சினை-கிளைகளையுடைய—பலவின்-பலாமரங்களின்—பழம்-பழங்களானவை—கனிந்து-கனிய—வீழ் (அவைகளிலிருந்து) விழுகின்ற—தேறலும்-தேனும்—வழிந்து-பெருக்கெடுத்து—பழனங்கடோறும்-கழனிகளிலெல்லாம்—பாய்தலின்-பாய்தலினாலே—வான்-ஆகாயத்தை—உற-தொடும்படி—செந்நெல்-செந்நெற்பயிர்களானவை—வளர்வன-வளரும்—எ-று, இது தொடர்புயர்வுநவிற்சியணி) (கருத்து) மலர்களின்தேனும்-பலாப்பழங்களின்தேனும்-கழனிகளிற்பாய்தலினாற் செந்நெல்விளைவன-எ-ம், (௯)

கூனிரும்பினிற்குறைத்தரிசும்மையிற்கொடுபோய்
மேனிவந்துயர்வரையெனப்போர்பலவேய்ந்து
நீனிறக்கரும்பகட்டினாற் றெழித்துவைநீத்த
தூநிறத்தநெற்பண்டியிற்பற்பலர்தொகுப்பார்,

(இ-ள்) கூனிரும்பினில்-அரிவாளினால்—குறைத்து-அறுத்து—அரி-(அவ்வறுக்கப்பட்ட) அரிகளை—சும்மையில்-சுமைகளாய்—கொடுபோய்-கொண்டுபோய்—மேல்-மேல்—நிவந்துயர் - ஓங்கிய—வரையென-மலைகள்போலத்தோன்ற—பல-பலவாகிய—போர் - போர்களை—வேய்ந்து-போட்டு-நீனிறம் - நீலநிறம்பொருந்திய—கரு-கறுத்தபகட்டினால்-கடாக்களினாலே—தெழித்து-துவைப்பித்து—வை- வைக்கோலை—நீத்த-கழித்த—தூ-பரிசுத்தமாகிய—நிறத்த-காந்தியையுடைய—நெல்-நெற்களை—பண்டியில்-பண்டிகளாற் (கொண்டுபோய்) பற்பலர்-பலபலசாதியார்களும்—தொகுப்பார் - (களஞ்சியங்களிலேசேர்ப்பார்கள் —எ-று, நெற்களையறுத்துக் கடாக்களால் மிதிப்பித்துவைக் கோலைத்தள்ளி அந் நெற்களைப்பண்டியிற்கொண்டு போவார்கள்-எ-ப. (௰)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய-விருத்தம்,

குரும்பைமென்முலையாராடக் கூந்தலினறவந்தோய்ந்த
விரும்புனலாறுபாய வெறிதிரையச்சுருட்டுந்தெண்ணீர்க்
கருங்கடற்புலவுநீங்கி நறுமணங்கமழுமென்றால்
முருந்துறழ்மூரலார்த மிகுதியைமொழியலாமோ,

(இ-ள் குரும்பை-தென்னம்பிஞ்சுபோன்ற—மெல்-மெல்லிய—முலையார்-முலைகளையுடையமாதர்—ஆட-முழுக—கூந்தலில்(அவர்)தலைமயிரிலுள்ள—நறவம்-சாந்தத்தோடு—தோய்ந்த-கலந்த—இரும்-பெரிய—புனல்-நீரானது—ஆறு-ஆற்றினாலே (போய்) பாய-விழ—எறிவீசுகின்ற—திரை-அலைகளை—சுருட்டும்-மடக்கும்—தெள்-தெளிவுபொருந்திய-நீர்-நீரையுடைய—கரும்-கரிய—கடல்-கடலானது—புலவு- புலாலநாற்றத்தை—நீங்கி-நீங்கி—நறுமணம்- நல்லமணமானதுகமழுமென்றால்—முருந்து-மயிலிறகினடியை—உறழ்ஒத்த- மூரலார்—தந்தபந்தங்களையுடையஅவர்களது-மிகுதியை-பெருக்கத்தை—மொழியலாமோ- (நான்) சொல்லலாமோ—எ-று, தம்சாரியை-ஒ-எதிர்மறை அந்நாட்டுமகளிரது செல்வமிகுதியைச்சொல்லுதலால் வீறுகோளணியாம் (கருத்து) மாதர்களாடியநீரினாலேகடலானதுபுலால்நாற்றநீங்கிமணம் வீசுமானால்அம்மாதர்பெருக்கத்தைச்சொல்லலாமோ-எ-ம். (௰௧)

பூமலிதடங்கடோறும் புனல்குடைமகளிரீட்டங்
காமருகழனிதோறுங் கடைசியர்குரவையீட்டந்
தேமர்ச்சோலைதோறுஞ் செழுங்குயிற்செருமுதியீட்டக்
கோமறுகிடங்கடோறுங் குணில்பொருமுரசினீட்டம்,

(இ-ள்) பூ-மலர்களாலே—மலி-நிறைந்த—தடங்கடோறும் - குளங்களிலெல்லாம்—புனல் குடை-நீர்விளையாடுகின்ற—மகளிர்- மாதரது—ஈட்டம்-கூட்டமும்—காமர்-அழகிய—கழனிதோறும்- வயல்களிலெல்லாம்—குரவை-கைக்கோத்தாடுதலையுடைய—கடைசியர்- உழத்தியரது—

ஈட்டமும்-கூட்டமும்—தேம்-வாசனைபொருந்திய—மலர்- மலர்களையு டைய—சோலைதோறும்-சோலைகளிலெல்லாம்—தொழுதிஒலித்தலையு டைய—செழு-செழிய—குயில்-குயில்களது—ஈட்டம் - கூட்டமும்— கோ-அரசரது—மறுகு- வீதிகளுடைய—இடங்கடோறும் - இடங்களி லெல்லாம்—குணில்-குறுந்தடியால்—பொரு-அடிக்கப்படுகின்ற—மு ரசின்முரசங்களது-ஈட்டம்—கூட்டமும்-(இருக்கும்)—எ-று. (காமருகு வென்பதில்-உகரம்-சாரியைதொழுதிபுள்ளொலிகோசாதியொருமை) (கருத்து) குளங்களெங்கும் நாரைமாதர்கூட்டங்களுஞ்சோலைகளெங்குங்கு யில்கூட்டங்களு-இராசவீதிகளெங்கும் பேரிகைக்கூட்டங்கள் எ-ம். ()

கறுவுவாரொன்றொடொன்று காரணமின்றிச்சீறிப்
பொறியுடைக்குறும்பூழ்தம்மிற்போர்செயப்பொருத்துமோதை
செறிமயிர்த்தகர்கடம்மிற் றீயெழத்தாக்குமோதை
யறைகழல்வீரர்க்கு மலைவைப்பயக்குமன்றே.

(இ-ள்) பொறியுடைய-புள்ளிகளையுடைய—குறும்பூழ்-காடைகளாண வை-தம்மில்-தம்முள்ளே - ஒன்றொடொன்று—ஒன்றுடனொன்று-கார ணமின்றி-எதுவில்லாமல்—கறுவுவாரும்- கறுவுகளுடனே—சீறிசீறிக் கொண்டு-போர்-சண்டையை—செய-செய்யும்படியாக—பொருத்தும- (அவற்றை)கூட்டுதற்களுண்டாகின்ற-ஓதை-(சிறுவரோசையானது— செறிவுகருகிய—மயிர்- மயிர்களையுடைய—தகர்கள் - ஆட்டுக்கடாக்க ள்—தம்மில்-தம்முள்ளே—தீ- நெருப்பானது—எழ- தோன்றசாரக ல்-ஒன்றையொன்றிடித்தலை—நோக்கி-பார்த்து—அரை-ஒலிக்கின்ற—க ழல்-வீரக்கழலையுடைய—வீரர்வீரரானவர்—ஆர்க்கும (ஆச்சரியப்பட்) டொலிக்கின்ற— அமலையை-ஓசையை-அவிக்கும்- அடக்கும்—எ-று- அ ன்று-ஏ-அசைகள் (கருத்து) காடைகளைச்சண்டைசெய்விக்குஞ் சிறுவர் கள் சத்தமானது ஆட்டுக்கடாக்களைச்சண்டைசெய்வித்துப் பார்க்கும் வீரர்சத்தத்தையடக்கும் எ-ம். (௫௩)

மாதர்மென்முல்லையீன்ற வாண்முகையனையமூரல்
கோதறுகருணைதீம்பால் கொழுங்கனியிவற்றினோடு
மாதுலர்யாவரென்ன வதிர்குரன்முரசிற்சாற்றி
வேதியர்க்கருத்திப்பின்னர் விருந்தொடுநுகர்வர்மாதோ.

(இ-ள்) ஆதுலர்-யாசகர்—யாவரென்ன- யாவரென்று—அதிர்-அதிர்கி ன்றகுரல்-ஓசையையுடைய-முரசில்-முரசினாலே-சாற்றி- விளம்பரஞ்செய் து)மாதர்-அழகிய—மென்- மெல்லிய முல்லை-முல்லைக்கொடியில்—ஈ ன்ற தரப்பட்ட-வால்-வெள்ளிய- முகையனைய-அரும்புகள்போலும்— மூரல்சோறும்—கோதறு-குற்றமற்ற—கருணை- பொரிக்கறியும்-தீ-தித் திப்பாகிய—பால்- பாலும்—கொழு-செழிய— கனி-பழமும்—இவற்றி னோடும்-ஆகியவிவற்றோடுமற்றவுணவுகளையும்—வேதியர்க்கு-அந்தண ரை—அருத்தி (முன்னே)உண்பித்து—பின்னர்-அதன்பின்பு— விருந் தோடு,சுற்றத்தார்முதலியயோரோடன்றிவிருந்தினரோடும்— நுகர்வா ர்- அந்நாட்டோர்)உண்பார்—எ-று மாது-ஓ- அசைகள், (உம்மையிரண

மெச்சம்வேதியர்க்குஉருபுமயக்கம் (கருத்து யாசகரைவரும்படிமுரசறைவித்தேமுன்பிராமணரை உண்ணச்செய்து பின்விருந்துடனுண்பார்-எ-ம். (௰௪)

முல்லையங்கோதைநல்லார் முகமதிவெயர்வுதோன்ற
வல்லிநுண்மருங்குனோவ வால்வளைவாய்விட்டார்ப்ப
மெல்விரல்காந்தள்சேப்ப வெண்டயிர்கடையுமோதை,
கொல்புலிமுழக்கமென்ன வயின்றொறுங்குளிறுமாதோ,

(இ-ள்) முல்லை-மலர்களைச்சூடிய—அம்-அழகிய—கோதை-கூந்தலையுடைய—நல்லார்-இடைச்சியர் முகமதி (தமது) முகமாகியசந்திரனிடத்து—வெயர்வு-வெயர்வையானது—தோன்ற-உண்டாகவும்—வல்லி-பூங்கொடிபோலும்—நுண்-நுட்பமாகிய—மருங்குல்-இடையானது—நோவ-வருந்தவும்—வால்-வெள்ளிய—வளை-சங்கவளையல்களானவை—வாய்விட்டு-ஒன்றோடொன்றுதாக்குண்டு—ஆர்ப்ப-ஒலிக்கவும்—மெல்-மெல்லிய—விரல்-விரல்கள்—காந்தள்-காந்தண்மலர்போல—சேப்ப-சிவக்கவும்—வெண்-வெள்ளிய—தயிர்-தயிரை—கடையும்-கடைதலினுண்டாகின்ற, ஓதை-ஓசையானது—கொல்-கொல்லுகின்ற—புலி-புலியினது—முழக்கமென்ன-உறுமுதல்போல—வயின்றொறும்-(அவர்)வீடுதோறும்—குளிறும்-ஒலிக்கும்—எ-று. மாது ஓ அசைகள்) (இதுசேர்வையணியாம்) (கருத்து) இடைச்சியர்தயிர்கடையுஞ்சத்தமானதுகொல்லும்புலிமுழக்கம்போல வீடுகடோறுஞ்சத்திக்கும்-எ-ம். (௰௫)

பூங்கருப்புடைந்ததீஞ்சா றடுபுகைபுயலென்றெண்ணி
மாங்குயிற்றொகுதியாவும் வாய்விடாதொழிந்தமஞ்ஞை
தூங்கிசைவண்டுதேனுஞ் சுரும்பொறிஞிமிறும்பாடத்
தேங்கமழ்சோலைதோறுஞ் சிறைவிரித்தாடுமாதோ.

(இ-ள்) உடைந்த (ஆலையிற்) சிதைந்த—பூ-அழகிய—கரும்பு-கரும்புகளையுடைய—தீ-தித்திப்பாகிய—சாறு-சாற்றை—அடு-காய்ச்சுமிடத்தெழுகின்ற—புகை-புகையை—புயலென்று-மேகமென்று—எண்ணி-நினைத்து—மா-மாமரங்களிலுள்ள—குயில்-குயில்களுடைய—தொகுதியாவும்-கூட்டங்களெல்லாம்—வாய்விடாதொழிந்த-கூவாதொழிந்தனவாக-மஞ்ஞை-மயில்களானவை—தூங்கிசை-நாட்டியராகத்தை—வண்டு-கருவண்டுகளும்—தேனும்-தேன்வண்டுகளும்—சுரும்பொறி-பொறிவண்டுகளுடனே—ஞிமிறும்-பொன்வண்டுகளும்—பாட-பாடுதல்செய்ய—தேம்-தேனானது—கமழ்-மணக்கின்ற—சோலைதோறும்-சோலைகளினெல்லாம்—சிறை-கலாபத்தை—விரித்து-விரித்துக்கொண்டு—ஆடும்-கூத்தாடும்—எ-று. மாது ஓ அசைகள் (புகையைமேகமென்றுமயங்குதலால் மயக்கவணியாம்) (கருத்து) கரும்பஞ்சாற்றைக்காய்ச்சுமிடத்திலெழும்புகையை மேகமென்றுகுயில்கள் கூவாதடங்கினவண்டுகள் பாடமயில்கள் நடனமாடின-எ-ம். (௰௬)

அரக்கொத்திகுமுதச்செவ்வா யலர்முலையங்கலார்தந்
திருக்கிளர்கமலம்பூத்த சேயரிக்கண்ணும்வாவி
யருக்கிளர்குவளைப்போதும் வேற்றுமையுணராதுற்ற
வரிசிறைத்தும்பியோடு வண்டுடன்மறுகுமாதோ.

(இ-ள்) அரக்கு-சிவப்புநிறத்தை—எறி - வீசுகின்ற — குமுதம்-அல்லி மலர்போலும்— செவ்-செய்ய-வாய்-வாயையும் - அலர்-அடியரந்த, முலை-முலைகளையுடைய—அங்கலார்-அரக்காட்டு மாதருடைய—திரு-அழகிறு ஒளிர்-விளங்குகின்ற— கமலம்-தாமரைப்பூவாகிய—(முகங்களிடத்து) பூத்த-மலர்ந்த, சேய்-செய்ய—அரி - இரேகைகளையுடைய— கண்ணும்-கண்களுக்கு—வழுவி - குளத்தினிடத்து—உரு-அழகினால்—இளர்-விளங்குகின்ற-குவளைப்போது - நீலோற்பலமலர்களுக்கும—வேற்றுமை-பேதத்தை-உணரா-து- அறியமாட்டாமல் உற்ற (தேனுண்ண) வடைந்த—வரி-கீற்றுக்களையும் — சிறை-சிறைகளையுமுடைய தும்பியோடு-தும்பிகளுடன்—வண்டு-வண்டுகளின்— இனம்- கூட்டம்—மருளும்மயங்கும்—எ-று. மா-து-ஓ-அசைகள் (இது பொருளைமயணி (கருத்து) அநகாட்டுப்பெண்களின் கண்களிவையென்றுங் குவளைமலரிவையென்றும்) அறியாதுவண்டினங்கள்மயங்கும் — எ-று. (௫௭)

அல்லியங்கோதைமாத ரன்பொடுவளர்த்தமுல்லை
மெல்லரும்பீன்றதென்னவிழாவார் முழவினோடு
மல்லுயர்திணிதோண்மைந்தர் மங்கையர்வதுவையாற்றும்
பல்லியமுழக்கமார்க்கும் பாவையொடிகலுமாதோ

(இ-ள்) அல்லி- அகவிதழ்களாகிய — அம்; அழகிய—கோதை -மாலையையுடைய—மாதர்-மகளிராணவர்—அன்போடு-அன்புடனே—வளர்த்த,(தம்மால் வளர்க்கப்பட்ட,) முல்லை-முல்லைக்கொடியானது—மெல்-மெல்லிய அரும்பு- அரும்புகளை —ஈன்றதென்னு- தந்ததென்று-நினைத்து, விழா (அதற்காக) திருவிழாவை—அயர்-செய்யுமிடத்துண்டாகின்ற—முழவினோடுவாத்தியவொலியோடு—மல்-மற்போரில்—உயர் - உயர்ந்த —திணி வலிமைபொருந்தியதோள்-தோள்களையுடைய— மைந்தர்-ஆடவராணவர்—மங்கையர்மங்கைப்பருவப்பெண்களை, வதுவையாற்றும்-விவாகஞ்செய்தற்கணுண்டாகின்ற — பல்லியம்பலவகைவாத்தியங்களது— முழக்கம்-ஓசையானது ஆர்க்கும்-ஒலிக்கின்ற—பாவையோடு-கடலொலியோடு — இகலும்-பகைக்கும்—எ-று. மா-து-ஓ அசைகள (இது தொடர்பு நவிற்சியணி (கருத்து) முல்லைமலர்ந்ததென்று திருவிழா நடத்துகின்ற வாத்தியவோசையும்விவாகம்நடத்துகின்றவாத்தியவோசையும்கடலோசையோடுமாறுபடும்—எ-று. (௫௮)

அவிரிழைசுமக்கலாற்றா தங்கலார்பரிந்துநீக்க
திவளொளிமணியுமுத்துஞ் சிந்தியமுன்றிறோறுங்
குவிமுலைகயவாய்ச்செங்கட் குடம்புரைசெருத்தன்மேதி
கவைபடிதொயிர்ப்பழாகிக் காறளர்ந்தொதுங்குமன்றே

(இ-ள்) அங்கலார் அத்தேயத்துமாதரால்-சுமக்கலாற்றாது-சுமக்கமாட்டாமல்—பரிந்து-வருந்தி—நீக்க-களைந்தெரியப் பட்ட—அவிர்-ஒளிசெய்கின்ற, இழை - ஆபரணங்களில்—திவள்- அசையாநின்ற —ஒளி-ஒளியையுடைய, மணியும்-பலவிதமணிகளும்—முத்தும்-முத்துக்களும்—சிந்திய இறைந்துகிடக்கின்ற—முன்றில்தோறும்—வீட்டுமுன்னிடந்தோறும் குவி குவிந்த—முலை முலைகளையும், கயம்-பெரியனவாகிய—வாய வாயையும், செய் செய்ய, கண் கண்களையும்—குடம்பனை குடம்போலும் செ

ருத்தல் மடியையுமுடைய—மேதி-எருமைகளானவை—கன்று பிரிவைக்கருதிவருந்தி, கால் கால்களானவைதளர்ந்து சேர்ந்து ஒதுங்கும்-பக்கங்களிலேயிலகும்—எ-று. அன்று-ஏ-அசைகள் (செல்வமிகுதியைச்சொல்லுதலால்வீறுகோளணியாம்) (கருத்து) பெண்களின்கண் தெரிந்தஆபரணங்களின் நவமணிகளின் - மேலேஎருமைகள்பிளவழலை யாமலைவிலகிப்போமென்பதாம். (௰௯)

பொரியரைத்தேமாநெற்றிப் பூங்கனிபிழிந்ததேனும்
விரிதலையரம்பையீன்ற மென்பழமுதிர்த்ததேனும்
முறுகவிழ்சுளைவாய்விண்ட முட்புறக்கனியின்றேனும்
குருகுபாய்தடமுமியாறுங் குறைவறப்பெருகுமன்றே

(இ-ள்.) பொரி-பொருக்குகளையும்—அரை அரையையுமுடைய—தேமா-தேமாவினது—பூ அழகிய—கனி-பழங்களானவை நெற்றி-நுனி பிழிந்த அவைகளிலிருந்தொழுகிய, தேனும்-மதுவும்—விரி-விரிந்த—தலை தலையையுடைய—அரம்பை-வாழைகளால்—ஈன்றதாரப்பட்ட—மென் மெலிய—பழம்-பழங்களால்—உதிர்த்த சொரியப்பட்ட—தேனும் மதுவும்—விண்ட வெடித்த—முட்புறக்கனியின் பலாப்பழங்களினுடை—முறுகு-பரிமளமானது—அவிழ் விரிகின்ற—சுளைவாய் சுளைவாயிலிருந்தொழுகிய—தேனும் மதுவும்—குருகு பறவைகளானவை பாய்-பாய்கின்ற தடமும் ஏரிகளும்-யாறு நதிகளிலும்—குறைவறக்குறைவுதீர—பெருகும்-பெருகிப்பாயும்—எ-று (முக்கனிகளின் சாற்றிற்கும் ஏரிநதிகளுக்குஞ்சம்பந்தமில்லாமையிருந்தாலேசம்பந்தத்தைக்கற்பித்தலினாலேதொடர்புயர்வுநவிற்சியணியாம்) (கருத்து) மாங்கனித்தேனும் வாழைக்கனித்தேனும் பலாக்கனித்தேனும்ஏரிகளிலும்நதிகளிலும்பெருகும்—எ-று. (௨௰)

அருமறைக்கிழவருள்ளத் தவர்கெடவன்பினல்கும்
பெருநிதிக்குப்பைபோதி பெய்புனல்பெருகியோடி
வரிவளையலறியீன்ற மணியிளநிலவுகாலுந்
திருவகீள்கழனிதோறுஞ் செந்நெலைவளர்க்குமாதோ

(இ-ள்.) அரு-அரிய—மறைக்கிழவர் - வேதத்திற்குரியபார்ப்பாருடைய—உள்ளத்து-மனத்திலுள்ள—அவர்-பெருளாசைய வாது, கெட-அழிய, அன்பின் பத்தியினாலே—நல்கும் - கொடுக்கப்படுகின்ற — பெரு—பெரியநிதி-பொருள்களது—குப்பையோதி- குவியல்களோடு—பெய்-விதிப்படிவார்க்கப்படுகின்ற—புனல்-நீரானது—பெருகி பெருக்கெடுத்து—ஓடி-விரைந்துபோய்—வரி-இரேகைகளையுடைய—வளை-சங்குகளால்—அலறி-கூவி—ஈன்றதாரப்பட்டமணி முத்துக்களானவை—இள-இளமைபொருந்திய—நிலவு-சந்திரிகையை, காலும்-வீசுகின்ற—திரு அழகிய—நீள்-நீண்டிருக்கின்ற—கழனிதோறும் கழனிகளிலெல்லாம்—செந்நெலை-செந்நெற்பயிரை—வளர்க்கும்-வளர்க்கும்—எ-று அகரம்சாரியைமா-து-ஓ அசைகள் (இது உறுப் பிறகலவையணி) (கருத்து) பார்ப்பாருக்குப்பொருள்குவியலோடு தத்தம்பண்ணுநீரானது செந்நெலைவளர்க்குமென்பதாம். (௨௧)

நிலவுவெண் முத்தும்பொன்னு நீனிறமணியுஞ்சாந்துந்
தலைமயக்குற்றவாற்றாற் றண்மதிதவழுங்கோட்டு
மலைவளம்பெரிதென்கோயான் வால்வளைபரந்துமேயு
அலைவளம்பெரிதென்கோயான் யாதெனவறைவன்மாதோ

(இ-ள்) நிலவு-சந்திரிகையையுடைய — வெள் - வெள்ளிய — முத்தும் முத்துக்களும் — பொன்னும் - கனகங்களும் — நீனிறம் நீலநிறத்தையுடைய — மணியும் மணிகளும் — சாந்தும்- சந்தனக்கட்டைகளும் — தலைமயக்குற்றவாற்றாம் கலந்திடைக்கையாம் — தண் - தண்ணிய — மதிசந்திரனால் — தவழும்-உராய்ந்துசெல்லப்படுகின்ற — கோட்டு - சிகரத்தையுடைய-மலை மலையினது — வளம்-வளத்தை,யான்-நான் — பெரிதென்கோ அதிகமென்றுசொல்லுவேனோ வால்வெண்மைபொருந்திய — வளை-சங்குகளானவை,பரந்து-பரவிமேயும்-மேய்கின்ற — அலை-அலைகளையுடைய கடலினது — வளம்வளத்தை — யான் நான் — பெரிதென்கோ-அதிகமென்றுசொல்லுவேனோயாதென-இவற்றுள்ளெதை (அதிகமென்று) அறைவன்-யான்சொல்லுவேன் — என்று.மாதும்ஓ-அசைகள்(இதுஐயவணியாம்)(கருத்து மலைவளத்தைப் பெரிதென்றுசொல்லுவேனோ கடல்வளத்தைப்பெரிதென்றுசொல்லுவேனோவென்றார் நூலாசிரியர் (௨௨)

உள்ளங்கனிந்தாயரூதும் வேயிசைசெவியினோர்ந்து
துளங்குவெள்ளருவிக்குன்றிற் றோகைகண்டுஞ்சுந்தெண்ணீர்
வளங்கெழுமருதமேவி வண்டுதாலாட்டச்செய்த
விளங்கனிக்குமரியன்ன மின்றுயில்கூருமாதோ

இ-ள், ஆயர் முல்லைநிலத்துள்ள இடையரால் — உள்ளங்கனிந்து மனமகிழ்ந்து — ஊதும் - ஊதப்படுகின்ற — வேய்-புல்லாங்குழல்களுடைய — இசை-இராகத்தை — செவியின்-காதுகளினாலே — ஓர்ந்து-கேட்டு — துளங்கு-அசைகின்ற — வெள-வெள்ளிய — அருவி- வெள்ளங்களையுடைய — குன்றில்- குறிஞ்சிநிலத்தில் — தோகைமயில்களானவை — கண்டுஞ்சும்-தூங்கும்-தெண்டெள்ளிய — நீர்நீரினதுவளம்வளமானது-கெழுபொருந்திய — வேலிவேலியையுடைய-மருதம்மருதநிலத்தில - வண்டு-வண்டுகளானவை, தாலாட்ட- தாலாட்டிசையைபாட — செய்தவயலில் — விளம இளமைபொருந்திய — கனி கனியையுடைய — குமரி பன்னம்பெட்டையனனங்களானவை — இன் இனிய — துயில்கூரும்நித்திரைபுரிகிறது — என்று(கருத்து) இடையர்புல்லாங்குழலிசைகேட்டுமலையில்மயில்களனித்திரைசெய்யும்மருதநிலத் தில்வண்டுகள்தாலாட்டிசைபாடச்செய்தவிலத்திலன்னங்கணித்திரைசெய்யுமென்பதாம், (௨௩)

கொடியன்மகளிர்தங்கள்குழைபடுதண்மருங்கேவாளாய்
படுகொலைபுரிவமாதர்படைநெடுங்குவளைக்கண்ணே
யடிமிசைமுறையிட்டென்று மாற்றுவசிலம்பேசூழ்ந்து
கடிமதுநுகர்வவண்டிறைர் கருகுழற்காமர்வண்டே

(இ-ள்) மகளிர் மாதருடைய — குழையும் - வாடுகின்றதண்- தண்ணிய — மருங்கே - இடைகளே கொடியன் - கொடுமையுள்ளவையாம் இம்மாதருக்கேகொடியெனவென்பதற்கு மருங்கே இடைகளே —

கொடியன-கொடிபோல்வன என்பது (கருத்தாகக்கொள்க) அன்னோர் அவருடைய—மாசா-அழகிய,படை-வீரரும் குவளை - நீலோர்ப்பலமும் போலுந்நெடு-நெடிய, கண்ணே-கண்களே, வாளாலுறு-பட-இறந்துபடுகின்ற—கொலை-கொலைத்தொழிலை, புரிவ - செய்வனவாம்— இங்கேகண்ணேவாளாற்படு கொலைபுரிவ வென்பதற்கு, கண்ணே-கண்களே—வாளா-காரணமில்லாமல்—படுவருந்துகின்ற,கொலை,வருத்தத்தை—புரிவ-செய்வன, என்பது(கருத்தாகக்கொள்க சிலம்பே நூபுரங்களே (அன்னோர் அவருடைய— அடிமிசை - அடிகளின்மேல் விழுந்து—முறையிட்டு,கன்றுறைகளோ முறையிட்டே—என்றும்-எந்நாளினும்—ஆற்றுவபுலம்புவனவாம் இங்கேசிலம்போடிமிசை முறையிட்டென்றுமாற்றுவவென்பதற்கு,சிலம்பே-சிலம்புகளே — அடிமிசை-அடிகளின்மேல்—முறை-முறையாக—இட்டு-தரிக்கப்பட்டு—என்றும்-எக்காலத்தும்,ஆற்றுவ-ஒலிப்பன—என்பது (கருத்தாகக்கொள்க) அன்னோர்-அவருடைய—கருகிய—குழற்கூந்தலிலுள்ள—காமகர் - அழகிய—வண்டே-வண்டுகளே, சூழ்ந்து-சூழ்ந்து,கடி(வேகத்திறைவே) விலக்கப்பட்ட-மது-கள்ளை, நுகர்வ-குடிப்பனவாம் (இங்கேவண்டே சூழ்ந்துகடிமது நுகர்வவென்பதற்கு வண்டே-வண்டுகளே, சூழ்ந்து- மொய்த்து,கடி-பரிமளம் பொருந்திய,மது-பூந்தேனை) நுகர்வ-குடிப்பன என்பது கருத்தாகக்கொளற்க(சாரியைகள் பகுதிப்பொருள் விகுதி இதுகொடுமை முதலானவ்கறைமனிதர்களிடத்தொழித்து இடைமுதலானவற்றிக்காட்டலால் ஒழிந்துக்காட்டணியாம். (உ௫)

கடல்படுமமுதமல்லற்கான்படுமமுதமோங்குந்
தடவரையமுதமொன்றித் தலைமயக்குற்றவாற்றா
லுடைதிரையமுதமொன்றே யுடையவிண்ணாடுகொல்லோ
கிடைதடாதற்குநேரா கிளத்தலாந்தகைமைத்தம்மா

(இ-ள்) கடல்-கடலினிடத்து,படும், உண்டாகிய அமுதம்(உப்புமுதலாகிய)வமுதமும்.மல்லல்-வளமைபொருந்திய, கான்-காட்டினிடத்துபடும் உண்டாகிய—அமுதம்(பால்முதலாகிய வமுதமும் ஓங்கும் உயர்ந்த தடம்-பெரிய —வரை - மலையினிடத்து—படும் - உண்டாகிய— அமுதல (தேன்முதலாகிய)வமுதமும—ஒன்றி-பொருந்தி—தலைமயங்குற்று-கலந்துகிடக்கிற — ஆற்றால்காரணத்தால்உடைதிரை-கரைமை)யுடைக்கின்ற—திரை-அலைகளையுடைய (கடலினிடத்துபடும்)உண்டாகிய-ஒன்றமுதம்—அமிர்தத்தையே—உடைய தன்னிடத்திலுடைய—விண்ணாடு-தேவலோகமோ—கிடைதடாதற்கு-கிடைத்தபக்கிற்கு-நேரா-ஒப்பாக கிளத்தலாம்-சொல்லலாம், தகைமைத்து-தகைமையுடையது-என்று(கொல்) அசை-ஒ(எதிர்மறை) இதுவேற்றுமையணி (கருத்து) கடலில்மலையில் காட்டில்பல திரவியம்பொருந்தியிருப்பதால இந்நாட்டைப்பொன்னாட்டுக்குத்தப்பொப்பாகச்சொல்லலாம்-எ-று, (உ௬)

நலனுயர்தமலிபார்க்குதண்ணிபவிநந்தோடுணைடும்
பலகலைகேளவியாய்ந்தும் பகற்பொழுதினிதினீக்கு

மலர்முலையங்கனார்த மலர்த்தாமரைத்தாளைநீவிப்
புலவிகடீர்த்துஞ்சேர்ந்து நள்ளிருட்பொழுதும்போமால.

(இ-ள்) நலன்-நற்குணங்களை—உறு-பொருந்திய—ஆருமரரியார்க்கு ஆடலொல்லார்க்கும்—நண்ணிய- தம்மிடத்துவந்தவிருந்தோரையவிருந்தினரோடு—உண்டும-உண்ணலாலும—பல- பலவாகிய—கலை-கலைகளை- கேள்வி-கேள்வியினாலே—ஆய்ந்தும்-ஆராய்தலாலும—பகற்பொழுது- பகற்காலமானது—இனிது- இனியதாக—நீங்கும்- கழியும்—அலர்-அடிபரந்த—முலை-முலைகளையுடைய—அங்கனார்-அழகியமங்கையருடை—அலர்த்தகம்-செம்பஞ்சூட்டிய—மலர்தாமரை- மலர்போலும்—தாள- அடிகளை—நீவி-தடவி—புலவிகள்-ஊடல்களை—தீர்த்தும்-நீக்குதலாலு சேர்ந்தும்-(அவரைச்) சேர்தலாலும்—நள்ளிருட்பொழுது- நள்ளிராக்காலமும்—இனிது-இனியதாக—போம்-கழியும்—எ-று. தம்சாரியை- ஆல்அசை கருத்து) வாணிபர்களுக்குப் பகற்பொழுதானது விருந்துண்ணுதலாலும கல்விப்பயிர்ச்சியாலும் நீங்கும் இராப்பொழுதானது பெண்கள்பிணக்கைநீக்குதலாலும் அவர்களைச்சேர்தலாலும் நீங்குமென்பதாம், (உசு)

கொல்லுலைவேற்கணல்லா ரொழுகரோடுநீத்த
வில்லுமிழ்கலன்களியாவு மெளிர்சுடரெரிக்குமாற்ற
மெல்லியும்பகலுந்தோன்றா திமையவருலகுமெய்க்கு
மல்லன்மாவிந்தமென்னும வளநகர்கூறலுற்றாம.

(இ-ள்) கொல்-கொல்லனது—உலை- உலையிலேகாய்ச்சப்பட்ட—வேல்-வேல்போலும்—கண்-கண்களையுடைய—நல்லார் - மாதரால்—கொழுநரோடு-கணவரோடு—ஊடி- பிணங்கி—நீத்த-களைந்தெறியப்பட்ட- வில்-ஒளியை—உமிழ்-வீசுகின்ற—கலன்களியாவும்-ஆபரணங்களெல்லாம்—மிளிர்-விளங்குகின்ற—சுடர் - கிரணங்களை—எரிக்கும்-வீசும்—ஆற்றால்-காரணத்தால்—எல்லியும்-இரா(வித) வென்றும்—பகலும்-பகலிதுவென்றும—தோன்றா-அறியமாட்டாமல்—இமையவர்- தேவரது—உலகம்-உலகத்தை—ஏய்க்கும்-ஒத்திருக்கின்ற—மல்லல்-செல்வத்தையுடைய—மாவிந்தமென்னும்- மாவிந்தமென்றுசொல்லப்பட்ட—நகர்-பட்டணத்தினது—வளம்-சிறப்பை—கூறலுற்றாம் (யாம்) சொல்லத்தொடங்கினோம்—எ-று. இதுகலையுவமையணி (கருத்து) மாதர்கள்கழற்றியெறிந்த ஆபரணப்பிரகாசத்தினால் தெய்வலோகத்துக்கொப்பாகுமாவிந்த நகரவளப்பத்தைச்சொல்லுவா மென்றார்-எ-ம். (உஎ)

நாட்டுப்படலம் முற்றிற்று.

கடவுள் துணை.

நகரப்படலம்.

அரவிந்தநகரத்திலுள்ள சிறப்பைச்சொல்லுதலாம்,

கலித்துறை

குடவளைக் குலம்வயிறுளைந் தீன்றமணி கொழிக்கு
மடுவில்வானக ருருவுகாட்டிய துபோன் மதில்சூழ்
கடிகொண்மா நகர்நிழல்கதுவிடாதகன்ற
புடைகொணீர்நிகருடுத்தலைபொங்குபேரகழி,

(இ-ள்) மதில்-மதிலை — சூழ்-சூழ்ந்த — கடி-காவலை — கொண்டிருக்கிற — மா-பெருமைபொருந்திய — நகர்முன் - சொல்லப்பட்டநகரமானது — குடம்-குடம்போலும் — வளை-சங்குகளின் — குலம்-கூட்டமானவை — வயிறுளைந்து-வயிறுநொந்து — ஈன்ற - ஒரோவிலையாகிய — மணி-முத்துக்களை — கொழிக்கும்-சொரிதற்கிடமாகிய — மடுவில்-ஒருதடாகத்துள் — வானகர்-அமராவதிப்பட்டணத்தினுடைய — காட்டியது - காட்டப்பட்டதாகிய — உருவு-நிழலை — போன்-போலும் — நகர்-அந்நகரத்தினால் — உடுத்து-உடுக்கப்பட்டு — அலை-அலைகளால் — பொங்கு - விளங்குகின்ற — பேர்-பெரிய — அகழி-அகழியானது — அந்நிழல் - அந்நிழலினால் — கதுவிடாது-பற்றப்படாமல் — அகன்றநீங்கியபுடைசுற்றுப்பக்கத்தை - கொண்டு (தனக்கிடமாகக்)கொண்ட — நீர்நீரை- (போன்போலும்) — எ-று, வயிறுளைந்தீன்மணி என்னப்பாடமோதலும் ஒபொருந்தும்போலும் என்னுஞ்செய்யுமென்னும் வாய்பாட்டு முற்றுவினைஈற்றிய லுகரங்கெட்டு லகரமெய்ணகரமெய்யாகத்திரிந்தது தொல்காப்பியம் வினையியல் சுக) அவற்றுள் செய்யுமென்னும் பெயரெஞ்சுகிளவிக்கு மெய்யொடுங்கெடுமே ஈற்றுமிசையுகர மவ்விடனறிதலென்மனார்புலவர் இதனாலறிக இது தற்குறிப்பணி. கருத்து அரவிந்தநகரமானது ஒருதடாகத்துள்ளே தோன்றிய தேவநகரைப்போலுமிருக்க- இவ்வரவிந்தநகரத்தின்கழியானது அத்தடாகத்திற்றோன்றியதேவநகரைச் சூழ்ந்தசலத்தைப்போலுமிருந்தது எப்படியெனில் கண்ணாடியுள்ளே முகந்தோன்றியவிடத்தில் கண்ணாடிவடிவந் தோன்றாது அம்முகந்தோன்றுவிடத்தில் அக்கண்ணாடிவடிவந்தோன்றுமிதுபோலவே தடாகத்துள்ளே தேவநகரந்தோன்றியவிடத்தில்சலந் தோன்றாது அத்தேவநகரந் தோன்றுவிடத்தில் சலந்தோன்றும் ஆனையால் தேவநகரத்தின்பிரதிபிம்பத்தையே அரவிந்தநகரமாகவும்-பிரதிபிம்பத்தைச்சூழ்ந்த சலத்தையே அரவிந்த நகரத்தினகழியாகவுங்கொள்க என்பதாம், (க)

கண்ணகன்றபேரகழியுழக்கியகரிக
டண்ணந்தாமரைத்தாளெனத்தடக்கையாற்பிலத்தி
னண்ணுஞ்சேடனையெடுத்ததன்குடிகையிறைறி
யுண்ணிலவுந்தொளிர்மணியினுற்றகையென்றெறியும்,

(இ-ள்) கண்ணகன்ற-இடம்பரந்த, பேர்-பெரிய, அகழியின்-அகழிநீரை, உழக்கிய-கலக்கிய, கரிகள்-யானைகள், தண்ணி-தண்ணிய, அம்-அழகிய, தாமரை-தாமரையினுடைய, தாளென-தாளென்றுநினைத்து

தடம்-பெரிய—கையால்-துதிக்கையினாலே—பிலத்தில் - பாதாளத்தில் நண்ணும்-வாசஞ்செய்கின்ற—சேடனை-சேடனென்னும்பாம்பை—எடுத்து மேலெடுத்து—அதன்- அப்பாம்பினது—சூடிகையில்-உச்சியினிடத்து—உள்- (அத) னுள்ளிருந்து—நிவந்து-மேலெழும்பி—வாரி-காணப்பட்டு—ஒளிர்-விளங்குகின்ற—மணியினால் - இரத்தினத்தினாலே—உற்கையென்று-கொள்ளியென்றஞ்சி—எறியும்- அதனை வீசும்—எ-று. (இது மயக்கவணி (கருத்து) அகழிபிறகலக்கியயானைகள் தாமரைத்தண்டென்று ஆதிசேடனையெடுத்து அதன்முடியின்மணியொளியால்கொள்ளிக்கட்டையென்றெறியும் என்பதாம். இது அகழிச்சிறப்பு. (௨)

ஒற்றையாழியந்தேர்வழியுயர்மதில்கடக்கப்
பெற்றிலாமையிற்பிறங்குபொற்கதவங்கடிறக்கு
மற்றநோக்குவனங்கலாரியல்புறவணியக்
கற்றைவெண்மதிசாளரத்தாடியிற்காட்டும்.

(இ-ள்) ஒற்றையாழி - ஒருருளையுடைய—அம் - அழகிய—தேவன் தேரையுடையசூரியனானவன்; உயர்-தன்வழியின்மேலுயர்ந்த—மதில்-மதிலை—கடக்க-தாண்டுதற்கு—பெற்றிலாமையின்- வல்லமைபெற்றில்லாமையால்—பிறங்கு- விளங்குகின்ற—பொன்-பொன்மயமாகிய—கதவங்கள்- அம்மதில்வழிக் கதவுகளை—திறக்கும்-திறக்கும்—அற்றம்-சமயத்தை—நோக்குவன்-பார்த்துக்கொண்டிருப்பான்—அங்கலார் - அழகியமகளிராயவர்—இயல்புற-இருந்தழகுண்டாக—அணிய-(திலகமுதலானவற்றைத்) தரித்துக்கொள்ள—கற்றை- கிரணக்கற்றையையுடைய—வெண்-வெள்ளிய—மதி - சந்திரனானவன்—சாளரத்து-(அம்மதின் மேல்) பலகணியின்புறத்திருந்து—ஆடியின் - நிலைக்கண்ணாடிபோல—காட்டும்-(அவருக்குத்) தன்னைக்காட்டுவன்—எ-று. நிலைக்கண்ணாடி-நிலைபாகமுன்வைக்கப்படுவது இதுதொடர்புகவிற்சியணி (கருத்து) சூரியனானவன்மாவின்நகரமதிலைக்கடக்கமாட்டாமல் கதவுகளைத்திறக்குஞ்சமயம்பார்த்திருப்பான் சந்திரனானவன் பெண்கள்திலதமுதலியபணிகளணிந்துகொள்ளத் தன்னைநிலைக்கண்ணாடிபோலக் காட்டுவான் என்பதாம் இது மதிலின்சிறப்பு. (௩)

மறுவிகந்தவெண்மதியெனவயங்கியபித்தி
செறியுமாடங்களவெண்கதிர்பரப்பியசெவ்வி
நறவுயிர்த்தபைந்துணர்மலிகற்பகநாட்டை
வெறுவிதாமெனவெண்ணகைப்புரிவனபோலும்.

(இ-ள்) மறு-களங்கத்தினின்றும்—இகந்த-நீங்கிய—வெண்- வெள்ளிய—மதியென-சந்திரன்போல—வயங்கிய-விளங்கிய—பித்தி-பளிங்குச்சுவர்களால்—செறியும்-நெருங்கிய—மாடங்கள்- மாளிகைகளானவை—வெண்-வெள்ளிய—கதிர்-கிரணங்களை—பரப்பிய-விரித்திட்ட—செவ்வி அழகினாலே—நறவு-தேனை—உயிர்த்- தருகின்ற—பை-பசிய—துணர்-பூங்கொத்துகளால்—மலி-நிறைந்த—கற்பகம்- கற்பகத்தருக்களையுடைய—நாட்டை - சுவர்க்கத்தைக் - நித்து—வறுவிதாமென - வறுமையுடையதென்று—வெண்-வெள்ளிய—நகை-சிரிப்பை—புரிவன-செய்வன,

போலும்-ந்க்கும்-எ-று (இதுபொருட்டற்குறிப்பு) கருத்து)மாடங்களானவை கிரணங்களைவிரித்திட்ட வழகினாலே பொன்னகரத்தைப்பார்த்து புன்னகைபுரிவனபோலுமிருக்கின்றனவென்பதாம்இதுமுதல் (கஅ) பாடல்களுளவ்வூர் மாளிகைவளத்தின்சிறப்பு (௪)

வடிகொள்வெண் சுதைதீற்றிய மாடநீள்கழுத்திற்
படியுமைம்முகில்கதிர்விரி பானிலாக்குழவி
முடியின்மீதுறத்தவழ்தலான் முழுமையும்வெள்ளைப்
பொடியணிந்தருள்கறைமிடற் றண்ணலைப்பொருவும்.

(இ-ள்) வடிகொள்-வடித்துக்கொள்ளப்பட்ட—வெள்-வெள்ளிய—சுதை-சுண்ணச்சாந்தை—தீற்றிய-பூசிய—மாடம்-மாளிகையானது—நீள்-நீடிப்பொருந்திய—கழுத்தில்-(அதன்) கண்டத்தின்கண்—மை-கரிய—முகில்-மேகமானது—படிய-படிந்திருக்க—கதிர்-கிரணங்களை—விரி-வீசுகின்ற—பால்-வெண்மைபொருந்திய—நிலாக்குழவி-பிறையானது—முடியின்மீது (அதன்) முடியின்மேலே—உற-பொருந்த—தவழ்தலால்-தவழ்தலால்—முழுமையும்-திருமேனி-முழுதிலும்—வெள்ளைப்பொடி-விபூதியை—அணிந்தருள்-பூசியருளிய—கறை-(நஞ்சக்) கறை பொருந்திய—மிடற்று-கண்டத்தையுடைய—அண்ணலை-பரமசிவனை, பொருவும்-ஒத்திருக்கும்—எ-று; இதுஉவமையணி) (கருத்து) மாளிகையானதுவடிவத்தின் சுண்ணச்சாந்தும் கழுத்திற்கரிய மேகமும்முடியிலே பிறையும் பொருந்தியிருத்தலாற் பரமசிவனுக்கொப்பாகும் என்பதாம். (௫)

மழைக்கண்மங்கையர் பயிற்றமரகதமணியி
னிழைத்தசெய்குன்றின் பைங்கதிர்பொன்னிலத்தெய்தக்
குழைத்தவைந்தரு நீழலிற்குலவுமானினங்க
டழைத்தபுல்லென விரைவொடுதனித்தனிகறிக்கும்.

(இ-ள்) மழை-குளிர்ச்சிபொருந்திய—கண்-கண்களையுடைய—மங்கையர்-கன்னிகைகள்—பயிற்ற-விளையாடுதற்கு—மரகதமணியின்-மரகதமணிகளாலே—இழைத்த-பதிக்கப்பட்ட—செய்-குன்றின்—விளையாட்டுமலைகளையுடைய—பை-பசிய—கதிர்-கிரணங்களானவை—பொன்னிலத்து-தேவலோகத்தின்கண்—எய்த-அடைய—குழைத்த-தளிர்த்த—ஐந்தரு-பஞ்சதருக்களது—நீழலில்-நிழலினிடத்தில்—குலவும்-குலவுகின்ற—மான்-பசுக்களுடைய—இனங்கள்-கூட்டங்களானவை, தழைத்த-செழித்த—புல்லென-புற்களென்றுநினைத்து—விரைவொடு-சீக்கிரத்தில்—தனித்தனி-ஒவ்வொன்றாக—கறிக்கும்-(அக்கிரணங்களைக்) கௌவும்—எ-று. மகரத்திற்றெளிவைப்புல்லென்றுமயங்கினதால்மயக்கவணியாம் (கருத்து) செய்குன்றிலிழைத்த மரகதக்கிரணங்களைத் தெய்வப்பசுக்கள்புற்களென்றுகடிக்கும் என்பதாம். (௬)

புதுமணத்திலகன்மகளிர் சாளரத்திடைப்பொருந்து
மதியமயிலினுயிர்ப்பங்கியர் மறைந்தனர்நோக்குங்

கதிர்கொள்வாண்முகமென்று தங்காதலர்ப்புல்லும்
பதுமமென்கரநீக்கி நீள்படைவிழிபுதைப்பார்

(இ-ள்) புது-புதிய, மணந்த-விவாகத்தையுடைய—மெல்-மெல்லிய—மகளிர்-மங்கையரானவர், சாளரத்திடை (மேல்வீட்டின்) பலகணியின் புறத்து—பொருந்து-சேர்ந்த—மதியை-சந்திரனை—இன்- இனிய—உயிர்-உயிர்போலச்சிறந்த—பாங்கியர் - தோழியானவர்-மற்றங்ஙனம் மறைந்தனர் மறைந்தவராகி — நோக்கும் - பார்க்கின்ற—கதிர்-கிரணத்தை—கொள்-கொண்ட—வாள்-ஒளியையுடைய—முகமென்று-முகமென்று நினைத்து—தம்-தம்முடைய—காதலர் நாயகரை—புல்லும்-தழுவிக்கொண்டிருக்கின்ற—பதுமம்- தாமரைமலர்போலும்—மெல்-மெல்லிய—கரம்-கைகளை, நீக்கி (அவரிலிருந்து) நீக்கி— நீள், நீண்ட, படை-வாள்போலும்—விழி-கண்களை— புதைப்பார்-மூடிக்கொள்வார் -எ-று (மதியைப்பாங்கியர்முகமென்று மயங்குதலால மயக்கவணியாம் கருத்து) புதிதாகவிவாகஞ்செய்துகொண்டபெண்கள்பலகணியின்புறத்தேதோன்றிய சந்திரனைமறைந்து பார்க்குந்தோழியர் முகமென்றெண்ணிநாயகரைத்தழுவிய கைகளால்கண்களைமூடிக்கொள்வாரென்பதாம் (எ)

வள்ளவாய்மலர்முகத்தியர்வதியுமேனிலையிற்
கள்ளறாமலர்நாற்றியசுருங்கையிற்கதிர்க
ளுள்ளுறப்புகுந்தாமதியுடலுரிஞ்சுதலாற்
பிள்ளைமையெனமதியாதனன்றெனப்பெரிதுவக்கும்

(இ-ள்) உவா-பர்வகாலத்திலேதோன்றுகின்ற—வெள்-வெள்ளிய, மதி-சந்திரனானவன்—வள்ளவாய்மலர்- தாமரைமலர்போலும்—முகத்தியர் முகத்தையுடையமாதரானவர்—வதியும்- வாசஞ்செய்கின்ற மேனிலையில மேலவீட்டில்—கள்-தேனானது—அறா-நீங்காத— மலர்-மலர்களை —நாற்றிய-தொங்கக் கட்டிய—சுருங்கையில-நுழைவாயிலிலே—கதிர்கள்-கிரணங்களானவை—உள-உள்ளே—உற-பொருந்த, புகுந்து-நுழைந்து—மதி-(யாவராலும்)மதிக்கப்படுகிற-உடல்(தன்பெரிய)உடம்பு—உரிஞ்சுதல்-தேய்தலினாலே—பிள்ளையாதல்- குழந்தையாதலே நன்றென-(தனக்கு நலமென்று நினைத்து—பெரிது-மிகவும்—உவக்கும் - (அப்பாலவத்தை) விரும்புவான்—எ-று (இதுவேண்டாவணியாகும் கருத்து)பூரணசந்திரனானவன்மேன்மாடச் சாளரவாயிலில் நுழைந்து உடல்வருந்தித்தேய்தலினாலே இளம்பிறைப்பருவமே நன்றென்றுமகிழுவானென்பதாம் (அ)

உருவின்மைந்தரில்வேனில்வேட்குடைநரில்லை
பொருளிலார்களிற்றனதனைப்பொருவிலாரில்லை
தெருளின்மாக்களிற் சேடனிற்றெருமருகுநரில்லை
யருளிலார்களிந்தருநிகர்களிலாரில்லை.

(இ-ள்) உருவு-அழகு—இல்-(தம்மிடத்தி)ல்லாத— மைந்தரிற்காளையருள்—வேனில்- வசந்தகாலத்தையுடைய—வேட்கு-மன்மதனுக்கு—உடைகுநர்-தோற்பவர்—இல்லை-இலர்—பொருள்-செல்வ பொருள்-இல்லார்களில (தம்மிடத்)திலலாதவருள் — தனதனை-குபேரனை—பொருவிலா(ர்)-ஒவ்வாதவர்—இல்லை இலர்—தெருள-கல்வியறிவு—இல்- தம்மி

டத்)தில்லாதமாக்களில்-மனிதருள்—சேடனில்- ஆதிசேஷனில்—தாழ்ந்தார்,குறைபவர்,இல்லை;இலர்—அருள்,ஈகையானது—இலார்களில்-(தம்மிடத்)தில்லாதவருமு—ஐந்தருபஞ்சதருக்களுக்கு—நிகர்சகிலார்.ஒப்பாகாதார்—இல்லை இலர்—எ-று. கருத்து) அழகிலாரில் மன்மதனிற்குறைந்தவரில்லைவறியரில் (போனிறக்குறைந்தவரில்லை, சேடரில்' ஆதிசேடனிற்குறைந்தவரில்லை,தொடாதவரில் பஞ்சதருக்களிற்குறைந்தவரில்லையென்பதாம். (௯)

பளிக்குமேனிலக்தன்புர்பாம்பயிட்வுறுகலவி
திளைத்துமார்பிடைத்துயில்பவர்முகத்தில்வெண்டிங்கள்
கிளைத்ததண்கதிர்பாய்புதல்கிளர்ந்தசாளரத்தில்
ஞெளித்தவாள்முகச்செவ்விளையக்கவர்வதொத்துளதால்

(இ-ள்) வெள்-வெள்ளிய-திங்கள்-சந்திரனானது—பளிக்கு-பளிங்கினாலாகிய—மேனிலத்து,மேல்வீட்டிலுள்ள-அங்கர்பால்-நாயகரிடத்தில், பயில்வுறு-நாளதோறும்பழகிய— கல்வி புணர்ச்சியை— திளைத்து-அனுபவித்து—மார்பிடை-அவர்மார்பினிடத்தே—துயில்பவர் தூங்குகிறமகளிரது—முகத்தில்-முகத்தினிடத்தே— கிளைத்த தழைத்த—தண்-தண்ணிய—கதிர்கிரணங்களை—பாட்புதல் விரிக்கவில்லை,மேல் கிளர்ந்த-விளங்குகின்ற—சாளரத்தின்-பலகணியின்புறத்து— ஞெளித்துமறைந்துநின்று—வாள-ஒளிபொருந்திய- முகம்அவர்முகத்தினுள்ள—செவ்வியை அழகை—கவர்வது திருடுவதை—ஒத்துளது-ஒத்திருக்கும் எ-று இது பொருட்டற்குறிப்பணி கருத்து மேன்மாளிகையிற் கணவருடன்புணர்ந்து அவர்மார்பின்மேல் தூங்குகிறபெண்களின்முகத்தில் சந்திரன்கிரணங்களைவிரித்தல் அப்பெண்கள்முகத்தழகைத்திருடுவதை ஒத்திருக்குமென்பதாம். (௰)

கணக்கொண்மாமணிதுயிற்றிபொன்கதிர்செய்மேனிலையிற்
சுணங்குபூத்தணிபருமிதத்துணைமுலைமகளிர்
மணங்கொடாமரைமுகமும்வெண்மதியமுமறியா
தணங்காமதிமருளும்போர்வையுமவெய்தும்

(இ-ள்) கணம்-கூட்டத்தை—கொள் கொண்ட—மா பெரிய—மணிமணிகளானவை—துயிற்றி-பதிக்கப்பட்டு—ஒள ஒளிய—கதிர்-கிரணங்களை—செய-செய்கின்ற—மேனிலையில்-மேல்வீட்டில்—சுணங்கு-தேமலில்,பூத்து படர்ந்து— அணிஅலங்கரிக்கப்பட்ட—பருமிதம்-பருத்துவளர்வதான—துணை-இரண்டாகிய —முலை- முலைகளையுடைய —மகளிர்-மாதரது—மணம்வாசனையை—கொள்கொண்ட-தாமரை-தாமரைமலர்போலு —முகமும்- முகத்தையும், வெள-வெள்ளிய— மதியமும்-சந்திரனையும்— அறியாது - அறியமாட்டாமல்—அணங்கு - தெய்வத்தன்மைபொருந்திய—இரா-இராத்திரியானது—மதிமருண்டு - புத்திமயங்கி—பார்த்து-கோகிலையுறவு- இவற்றுள்முகம்யாதோசந்திரன்யாதோவென்றுசந்தேகத்தை—எய்தும்-அடையும்—எ-று (இதுசந்தேகவணி)(கருத்து) இராக்காலத்திலுயரமானமேல்வீட்டில் உலாவுகின்ற பெண்கள்முக

மென்றுசந்திரனென்றும் அறியாதசந்தேகம் அடையுமென்பதாம்மாளி கை-சந்திரமண்டலத்தைஅளாவியதென்றறிக (௫௧)

மேனிவந்தொளிர்மாடத்தின்விழுத்தகநிரைத்த
பானிலாமணித்தகம்பினிற்றண்கதிர்பரப்பக்
கானறும்புனனிறைதலுங்கதிரவன்றடந்தேர்
மானினங்குடித்தயர்வுயிர்த்தும்பரின்வாவும்.

(இ-ள்) மேல் ஆகாயத்தில்நிவந்து-உயர்ந்து, ஒளிர்-விளங்குகின்றமாடத்தின் மேல்வீட்டில்—விழுத்தக-சிறப்பு பொருந்தியதாக நிரைத்த-வரிசையாக வைக்கப்பட்ட—பால்வெண்மை பொருந்திய—நிலாமணி-சந்திரகாந்தத்தாலாகிய—தகம்புனில்-குடங்களிலே—தண்-தண்ணிய—கதிர்-கிரணங்களைபரப்ப(சந்திரன்)விரிக்க—கால்-கக்கப்பட்ட—நறு-நல்ல—புனல்-நீரானது நிறைதலும் அவற்றுள்ளே நிறைதலும்—கதிரவன்சூரியனது—தடம-விசாலமாகிய—தேர்-தேரினுடைய—மான் - குதிரைகளின—இனம்கூட்டமானது—குடித்து- அந்நீரைக்குடித்து—அயர்வுயிர்த்து-இளைப்பாற்றிக்கொண்டு,உம்பரில் ஆகாயத்திலே—வாவும்-தாவும்—எ-று (இது மேனிலைக்குஞ்சூரியமண்டலத்துக்குஞ் சம்மந்தங்கற்பித்தலால் தொடர்புயர்விற்சியணி கருத்து மேல்வீட்டில்வைக்கப்பட்ட சந்திரகாந்தக்கற்குடங்களிலெசந்திரனாற்கக்கப்பட்டசலத்தைச்சூரியன்குதிரைகள்குடித்திளைப்பாறிநடக்குமென்பதாம்மாளிகைசூரியமண்டலத்தையும்அளாவியதென்றறிக. (௫௨)

முருகுயிர்த்தவெள்ளகிற்புகைமுகிலொடுமுழக்
குருமணிச்சுடர்வெயிலவிரிமாடநீள்கொடிகள்
பரிதிவானவனிடவுத்தேர்ப்பரியினைப்புடைத்தவ்
வருணனிற்றொழில்புரிந்தவன்காருஞ்சிறிதாற்றும்.

(இ-ள்)முருகு-பரிமளத்தை—உயிர்யித்த-தருகின்ற—வெள்ளிய—அகில் - அகிற்கட்டைகளது—புகைப்புகையானது—முகிலொடும்-மேகத்தோடு—உழக்கு-கலத்தோன்றுகின்ற-அ-அந்த குரு-நிறமுள்ள-மணி மணிகளது,சுடர்- கிரணமானது—வெயில்வெயில்போல—விரி-விரிகின்ற—மாடமாளிகையிற்கட்டிய—நீள்-நீட்சிபொருந்திய—கொடிகள் கொடிகளானவை,பரிதிவானவன்-சூரியனாகியதேவனது—நடவு-நடத்தலையுடைய—தேர்-தேரிற்பூட்டிய—பரியினை-குதிரைகளை,புடைத்து-அடித்து—அவ்வருணன்போல்—தொழில்-நடத்தலைத்தொழிலை—புரிந்து-செய்து—அவன்-அவ்வருணனது—கார்மைவருத்தத்தைசிறிதுசற்றே,ஆற்றும்தீர்க்கும்-எ-று (இது கலவையணி கருத்து)மேல்வீட்டிற்கட்டியகொடிகளானவைசூரியன்தேரிற்பூட்டியகுதிரைகளையடித்தச்சாரதித்தொழிலைசெய்துஅருணனதுவருத்தத்தைதீர்க்குமென்பதாம்.

வரிவளைக்குலவயினுமணிகளாணிமணிக
ட்டிருக்கைவலவனுன்வயிற்றிரண்ட

விரிகருப்புரவெண்மணற்குன்றினுலொலியார்
பொருவிலாவணமறிதிரைக்கடலினைப்பொருவும்.

(இ-ள்) வரி- இரேகைகளையுடைய- வளைக்குலம் ஈன்றும் சங்குதிகளின்-குவையினால் இராசிகளாலும், மணிகளால இரத்தினங்களினாலும், மணிகளா இரத்தினங்களை, தெரிதரும் எண்ணுகின்ற, கறங்கைகளாகிய, அலவனால் நண்டுகளாலும், வயின் இடந்தோறும், திரண்டகுவிந்த-விரிந்தகருப்புர கர்ப்பூரங்களாகிய, வெளவெள்ளிய, மணல்மணல்களுடைய குன்றினால் குவியல்களாலும் ஒலியால்ஓசையினாலும், பொரு-ஒன்றையொன்றொத்தி தாக்கின்ற, இல்மாடவரிசைகளையுடைய ஆவணம்கடைத், தெருவானது, மறிமடங்குகின்ற திரை-அலைகளையுடைய, கடலினைசமுத்திரத்தை, பொருவும்ஒக்கும்—எ-று, (இது உவமையணி கருத்து கடைத்தெருவினது கடலினையொப்பாகுமென்பதாம், வளை என்றதற்குகடலிலேசங்கென்றும கடைவீதியிலேவளையலென்றும், மணிகடெரிதரும்சாலவன் என்றதற்குகடலிலேமுத்தைஒப்பாகும்வட்டவுதெரிகின்றகைகளையுடைய நண்டென்றுகடைத்தெருவிலேகரங்களிலேமணிகளைவைத்துக் குணகுணங்களை அறிகிறவல்லவனென்றும் சிலேடையாக்கினுமபொருந்துமஎன்பதாம். (௰௪)

திங்கள்வெண்மணிநிலத்தவாமதிச்செழுங்கதிர்க
டங்கவீழ்புனற்பெருக்கொடுதலைப்பெய்துவிசும்பிற்
கங்கையாழ்கடற்றலைமகன்களிப்புறக்களித்தப்
பொங்குகற்புநூலுரைத்தவைப்புகாறவிளக்கும்,

(இ-ள்) விசும்பில்-ஆகாயத்திலுள்ள, கங்கை-கங்கையானவள், வெள்-வெள்ளிய, திங்கண்மணி சந்திரகாந்தக்கற்கள் பதித்த, நிலத்துமேல்-வீட்டிடத்தே, உலா - பர்வத்திலுண்டாகிற, மதி-சந்திரனுடைய, செழு-செழிய, கதிர்கள-கிரணங்கள, தங்க தங்கவீழ் - (அதிலிருந்து) வீழ்கின்ற, புனல-நீரினது, பெருக்கொடு வெள்ளத்தோடு, தலைப்பெய்து-கலந்து, ஆழ்-ஆழ்ந்த, கடற்றலைமகன் கடலாகிய (தன்) கணவனானவன், களிப்புற-அப்போதுகளிக்கக்களித்து தானுங்களித்து, பொங்கு-விளங்குகின்ற, கற்புநூல்-கற்பிலக்கணநூலினாலே, உரைத்த-சொல்லப்பட்ட விதிகளை, புகாற-குற்றமற, விளக்கும்-விளக்குவாள்—எ-று, (இது தற்பொருட்காட்சியணி (கருத்து) ஆகாசகங்கையானவள்-சந்திரகாந்தக்கற்கள் பதித்து மேல்வீட்டிலசந்திரகிரணங்களால் வீழ்கின்றவெள்ளத்தோடு கலந்து கடலாகியகணவன்களிக்கதானுங்களிக்கத்துணையாகச்சென்று கற்பிலக்கண விதிகளை விளக்குவாள—எ-று, (௰௫)

தடங்கொடாமரைத்தளிரியலுறைமின்னார
மிடங்கொண்டதலைசெறாமவென்றனைமினிவா
னடங்கவெள்ளுதுமென்னவோர்வஞ்சினமறைபாப்
படங்களுற்றியுபோன்றனபசியபொற்கொடிகள

(இ-ள்) பசிய-பசுமையுள்ள—பொன்-பொன்மயமாகிய—கொடிகள்-கொடிகளானவை—தடம் - விசாலத்தை—கொண்ட - தாமரை தாமரைப் - பூவிலிருக்கின்ற — தளிரியல - தளிர்போலுமெல்லியவடிவுடைய சீதாதேவியானவள் — உறையும் - வாசஞ்செய்கின்ற —

இந்நகரம்-இந்த (மாவிந்த) நகரமானது—இடம் - இடத்தை—கொள்-கொண்ட—புதலர்-பூமியிலுள்ள—நகரெலாம்-எல்லாநகரங்களையும்—வென்றனம்-வென்றோம்—இனி-இனிமேல்—வான்-தெய்வலோகத்தை அடங்க-எமக்கு கீழ்ப்பட—வெல்லுதும்-வெல்லுவோம்—என்ன-என்று—ஓர்வஞ்சினம்-ஒருசபதத்தை—அறைய - சொல்லி—நாற்றிய-(எழுதித்) தொங்கவிடப்பட்டனவாகிய—படங்கள் - படங்களை—போன்றன-ஒத்திருக்கின்றன—எ-று. (பொருட்குறிப்பிணி) (கருத்து) கொடிகளானவை மாவிந்தநகரம் எல்லாநகரங்களையும்வென்றோம இனித்தேவநகரத்தை வெல்லுவோமென்று படங்களெழுதிக் கட்டியதுபோலுமிருக்கின்றன என்பதாம், (௰௬)

அகனிலாமணிவட்ட நீளரிமதர்மழைக்கது
மகளிர்வாண்முகமதிக கண்டுதீம்புனலுமல்கப்
புகரிறென்பலைநறுக்குறடுரிஞ்சுபூந்தேய்வைப்
பகருமின்னுயிர்ப்பால்விரையூட்டினர்பகர்வார்.

(இ-ள்) நீள்-நீண்ட—அரி-இரேகைகளையும்—மதர்-செருக்கையும்—மழை-குளிர்ச்சியையும்பொருந்தின—கண்-கண்களையுடைய—மகளிர்-மாதரானவர்—வட்டம்-வட்டமாகிய—அகல்-பரந்த—நிலாமணி-சந்திரகாந்தக்கல்லானது—வாள்-காந்திபொருந்திய—முகமதி- அவர் முகமாகியசந்திரனை—கண்டு-காணலால்—தீம் - மதுரமாகிய—புனல்-நீரானது மல்கல்-(அதிலே) நிறைய—புகரில்-குற்றமில்லாத—தென்மலை-பொதியமலையிலுண்டாகிய—நறு - மணம்பொருந்திய—குறடு-சட்டைகளை—உரிஞ்சி(அதனிடத்தே) தேய்த்துண்டாக்கப்பட்ட—பூ - அழகிய—தேய்வை-சந்தனத்தை—பகரும்-புகழப்படுகின்ற—இன்-இனிய— உயிர்ப்பால்-சுவாசத்தினாலே—விரை-வாசனையை—ஊட்டினர் - ஏற்றினவராகி—பகர்வார்விற்பார்—எ-று. (கருத்து) உத்தமசாதிப்பெண்களானவர்கள் சந்திரகாந்தக்கல்லில் சந்தனத்தையுரைத்துச் சுவாசத்தினால் வாசமூட்டிவிற்பார்கள் என்பதாம். (௰௭)

* கலிவிருத்தம்.

நீங்கரியகூலமணி நீண்மறுகுதோறு
மாங்குயிலின்மென்குதலை மாலைபகர்மாதர்
தேங்கமழுயிர்ப்பின்விரை சேர்த்தினர்கள்விற்கும்
கோங்குமலர்சண்பகமென் கோதையினுங்கொள்வார்.

(இ-ள்) நீங்கரிய-ஒதுங்குதற்கிடமில்லாத—மணி-நவமணிகளையுடைய—நீள்-நீட்சிபொருந்திய —கூலமறுகுதோறும்- கடைத்தெருவெல்லாம்—மா-மாமரத்திலுள்ள—குயிலின்- குயிலிசைபோலும்—மெல்-மெல்லிய—குதலை-மழலைச்சொற்களையுடைய—மாலை-மாலைகளை—பகர்-விற்கின்ற—மாதர்-மங்கையரானவர்—தேம் பரிமளமானது—கமழ்- மணக்கின்ற—உயிர்ப்பின்-சுவாசத்தால்—விரை -வாசனையை—சேர்த்தினர்கள்-சேர்த்தவராய்—விற்கும்-விற்கப்படுகின்ற—கோங்குமலர்- கோங்குமலர்களாகிய—கோதை-மாலையை—மெல்- மெல்லிய—சண்பகம்-சண்

* யாப்பருங்கலம் அளவடிநான்கின் கலிவிருத்தம்,

பகம்-சண்பகமலர்களாகிய—கோதையினும்-மாலையினுஞ்சிறந்ததாக—
கொள்வார்-வாங்குவர்—எ-று, (கருத்து) உத்தமசாதிப்பெண்கள் சுவா
சத்தினால்வாசனையூட்டி விற்கின்றகோங்குமலர்மாலைகளைச் சண்பகம
லர்மாலைகளைப்பார்க்கிலும் சிறந்ததாகக்கொள்வார்களென்பதாம். (௰அ)

ஆடவரோடூடியெழுமஞ்சொன்மடநல்லார்
நீடொளியதூணின்முகங்கோட்டியெதிர்நிற்ப
வாடிடைமடவாரென மருண்டிறைவர்பாவைத்
தாடொழலுமெய்த்துணிதணிப்பநகைசெய்வார்.

(இ-ள்) ஆடவரோடு-தங்கணவரோடு—ஊடி-பிணங்கி—எழும்புறப்
பட்ட—அஞ்சொல்-அழகியசொற்களையுடைய—மடம்-பேதைமை
பொருந்திய—நல்லார்-மாதரானவர்—நீடு-மிகப்பொருந்திய—ஒளிய-கீர்
த்தியையுடைய—தூண்-ஸ்தம்பத்) தூணுக்கு—எதிர்-எதிராக—முகம்-
முகத்தை—கோட்டி-வளைத்துக்கொண்டு—இல்-அறைவீட்டில்—நிற்ப
நிற்க—இறைவர்-அக்கணவரானவர்—பாவை-(அத்தூணிமேலேதோன்று
கிற) பாவையைநோக்கி—வாடு-வாடுகின்ற—இடையர்-இடையை
யுடைய—அம்மாதர்களென்று-மருண்டு—மயங்கி—தாள்-(அப்பாவையின்)
பாதங்களை—தொழலும்-வணங்கலும்—மெய்-மெய்யாகிய—துணி-அ
ப்பிணக்கானது—தணிப்ப-தணிக்கவும்—நகைசெய்வார்-(அவர்) சிரிப்
பார்—எ-று, இதுபாவைகளைமாதரென்று மயங்குதலால்மயக்கவணி)
(கருத்து) மாதர்கள் கணவரோடு பிணங்கித்தூணுக்கெதிராகமறைந்தி
ருக்க அக்கணவர்கள் தூணிமேலேதோன்றும்பாவையைநோக்கி மாதர்க
ளென்று பாதத்தை வணங்கவும் பிணக்குநீங்கவும் அம்மாதர்கள்சிரிப்
பார்களென்பதாம். (௧௯)

வண்ணமுலைமாதர்பகர்வறியசெழுஞ்சாந்தங்
கண்ணொளிகள்பாயநரந்தங்கலந்ததென்றும்
வெண்ணகைபரத்தல்கருப்பூரமவிரவிற்றென்
றெண்ணியுநறுங்கலவையென்றிளைஞர்கொள்வார்.

(இ-ள்) வண்ணம்-அழகிய—முலை-முலைகளையுடையமாதர்—மங்கை
யரால்-பகர்—விற்கப்படுகின்ற-வறிய-கலப்பில்லாத-செழு-செழிய—சா
ந்தம்-சந்தனத்தில்—கண்ணொளிகள் (அவர்) கண்களினொளிகள், பாய்-
பாய்தலினாலே, நரந்தம்-கஸ்தூரியானது, கலந்ததென்றும்-கூட்டப்பட்
டதென்றும், வெள் வெள்ளிய, நகை-பல்லொளிகள், பரத்தல்-பாய்தலி
னாலே, கருப்பூரம்-பச்சைக்கர்ப்பூரமானது, விரவிற்றென்றும்-கூட்டப்
பட்டதென்றும், எண்ணி-நினைத்து, நறு-நல்ல, கலவையென்று-கூட்டு
சொக்கமென்று, இளைஞர்-ஆடவர், கொள்வார்-(அதனைவிலைக்கு) வாங்
குவார்—எ-று, இதுகண்ணொளியைக்கஸ்தூரியென்றும் பல்லொளியைக்
கர்ப்பூரமென்றும் மயங்கலால்மயக்கவணி) (கருத்து) உத்தமசாதிப்
பெண்கள் விற்கப்படுஞ் சந்தனத்தை அவர்கள்கண்ணொளிகள்பாய்தலா
ற் கஸ்தூரிகலந்ததென்றும் பல்லொளிகள்பாய்தலாற் கருப்பூரங்கலந்த
தென்றும் வாலிபர்கள்வாங்குவார்களென்பதாம். (௨௰)

பளிக்கறைபுக்கந்தணர்கள் பாயொளியின்வாயில்
வெளிப்படுதலின்றிமருண் மேவிமுழறைநீத்
துளக்கறுமிடத்துவிரை தோய்ந்துவருதென்ற
லிளைத்துலவுவெள்ளிடையின் வாயிறெளிகிற்பார்.

(இ-ள்) பளிக்கு-பளிங்கலாகிய — அறை - அறையிலுள்ளே — புகுந்தணர்கள் நுழைந்தவர்கள — பாய - பரந்த — ஒளியின்-ஒளியினாலே — வாயிலானது — வெளிப்படுதலின்றி-அறியப்படுதலில்லாமையினால் — மருள்-மயக்கத்தை — மேவி- அடைந்து — அளக்கறுமிடத்து-அசைவற்றபொதிகைமலையிலிருந்து — விரை-(சந்தன) வாசனையில் — தோய்ந்து-படிந்து — வரு-வருகின்ற — தென்றல்-தென்றலானது — நிழல்- குளிர்ச்சியோடு — நாறி தோன்றி — இளைத்து-அசைந்து — உலவு-சஞ்சரிக்கிற — வெள்ளிடையின்-வெளியினாலே — வாயில்- வந்தவாயிலை — தெளிகிற்பார் - அறிந்துகொள்வார் — எ-று. (இதுசிறப்பணி) கருத்துபளிங்கறையுட்புகுந்தவர் ஒளியால் வாயிலறியாது மயங்கித்தென்றலால் வாயிலறிந்தார்கள் என்பதாம். (உ௧)

வில்லுமிழும்மணிகுயிற்றிமிளிர்மாடத்
தொல்கியநகிற்கொடிகளும்ப ருலகெய்தி
பல்லவமுயிர்த்துவளர்பைந்தருவின்மேவும்
வல்லிபடர்கின்றகொழுகொம்பெனவயங்கும்.

(இ-ள்) வில்-காந்தியை — உமிழும்-வீசுகிற — மா- பெருமைபொருந்திய — மணி-மணிகளானவை — குயிற்றி-பதிக்கப்பட்டு — மிளிர் - விளங்காநின்ற — மாடத்து-மாளிகைகளின்மேல் — ஒல்கிய - அசைகின்ற — நகிற்கொடிகள்-சீலைக்கொடிகளானவை — உம்பர்-தேவரது — உலகு - உலகத்தை — எய்தி-அடைந்து — பை-பசிய — தருவில்- கற்பகத்தருவின்மேல், மேவும்-அடைதற்குரிய — பல்லவம்-தளிர்களை — உயிர்த்து- ஈன்று — வளர்-வளர்கின்ற — வல்லி-கொடிகளானவை — படர்கின்ற-படர்தற்குக்காரணமாயிருக்கின்ற — கொழுகொம்பென-கொழுகொம்புகள்போல — வயங்கும்-விளங்கும் — எ-று. (இது குறிப்பணி) (கருத்து) மணிமாடத்திற்கட்டியகொடிகளானவை கற்பகத்தருவின்கீழ்வளர் கொடிபடர் கொழுகொம்பெனவிருக்கும் என்பதாம். (உஉ)

திங்களுநல்லார்முகமுஞ்செவ்விதெரிக்கொண்ணா
வங்கலுழுமேனியொடு மின்பிரிக்கலாகா
மங்குறவழ்வெண்கொடியும்வானதியுமணியால்
வெங்கதிர்செய்மாடமிசைவேறறியலாகா.

(இ-ள்) மணியால்-மாணிக்கங்களால் — வெங்கதிர்-சூரியகிரணத்தைச் செய்-செய்கின்ற — மாடமிசை- மாளிகையின்மேல் — திங்களும்-சந்திரனும் — நல்லார்-மாதரது — முகமும்- முகமும் — செவ்வி-அழகினாலே — தெரிக்கொண்ணா-வேறுபடுத்தப்படாவாம் — அம்- அழகினாலே — கலுழும் விளங்காநின்ற — மேனி (அவர்சரீரமும்) — மின்-மின்னற்கொடியும் — பிரிக்கலாகா-பிரிக்கப்படாவாம் — மங்குல்-மேகங்களானவை — தவழ் (மேலே) தவழ்கின்ற — வெண்கொடியும் வெள்ளைக்கொடியும் — வானதியும்-ஆகாயகங்கையும் — வேறு-வேறாக — அறியலாகா - அறியப்படாவா

ம்—எ-று (இதுபொதுமையணி (கருத்து) சந்திரனும் பெண்கள்முகமும் மின்னலும் பெண்களுடையமேனியும் வெண்கொடியும் ஆகாயகங்கையும்வடிவினால் வேறுபடுத்தப்படாவாம் என்பதாம். (உரு)

சந்தநறுமென்புகை தவழ்ந்தசிலமெங்கும்
பந்துபயில்கோதையர்பசும்பொனணியாவு
மைந்தருவியன்சினையணிந்தன ரதன்றே
வந்துநனியேற்பவர்மகிழ்ந்திடவழங்கும்

(இ-ள் சந்தம்-சந்தனக்கட்டைகளது—நறு-மணமுள்ள—மெல்-மெல்லிய—புகை-புகையானது—தவழ்ந்த-படிந்த—சிலமெங்கும்-மேல்வீடெங்கும்—பந்து-பந்தாட்டத்தில்—பயில்-பழகுகின்ற—கோதையர்-மாதரானவர்—பசும்பொன்-பசும்பொன்னாலாகிய—அணி-ஆபரணங்களையும்—யாவும்-மற்றெல்லாவற்றையும்—ஐந்தரு-பஞ்சதருவினுடைய—வியன்-பெரிய—சினை-கிளைகளில்—அணிந்தனர்-வேய்ந்தார்—அதன்றே-அதனாலன்றோ—வந்து (நம்மிடத்து) வந்து—ஏற்பவர்-இரப்பவர்க்கு—மகிழ்ந்திட-மகிழும்படி—நனி-மிகுதியாக—வழங்கும்-விரும்பப்பட்டவற்றைக்கொடுக்கும்—எ-று (இதுகற்பகத்தருவுக்கு விதுசதிர்கமையால்) ஏதுத்தற்குறிப்பணி (கருத்து) மேல்வீட்டிற்பந்துவிளையாடுகின்றபெண்கள் ஆபரணமுதலியவற்றைக்கழற்றிப் பஞ்சதருக்களில் அணிந்தனர் அதனாலல்லவோ அத்தருக்களிரந்தவர்களுக்கு ஈகின்றன என்பதாம், (உசு)

இதுவும்கலிவிருத்தம்.

வாய்ந்தமின்னைமடந்தயராக்கிவிண்
போந்திடலன்றோமலர்ப்புங்கவன்
சாந்தணிந்ததமனியக்குன்றென
வேந்துவெம்முலைப்பாரமியற்றினான்,

(இ-ள்) மலர்-தாமரைப்பூவிலிருக்கின்ற—புங்கவன்-நான்முகக்கடவுளானவன்—விண்-மேகத்தின்கண்—வாய்ந்த-பொருந்திய—மின்னை-மின்னற்கொடிகளை—மடந்தையராக்கி-மங்கையராக்கி—போந்திடாமலன்றோ-(அம்மேகத்தினிடத்தே) போகாதிருத்தற்கன்றோ—சாந்து-சந்தனத்தை—அணிந்த-பூசிய—ஏந்து-சுமக்கப்படுகின்ற—வெம்-விருப்பஞ்செய்கின்ற-பாரம்-பாரமாகிய—முலை-முலைகளை—தமனியக்குன்றென-பொன்மலையைப்போல—இயற்றினான் (அவருக்கு) உண்டாக்கினான்—எ-று. (இதுபயன்றற்குறிப்பணி; (கருத்து) பிரமதேவனானவன் மின்னல்களைப்பெண்களாக்கி அம்மின்னல்களாகிய பெண்கள் மேகத்திற்செல்லாமலிருக்கப் பொன்மலைகளைபோலேநன்முலைகளைப்படைத்தான் என்பதாம். (உஎ)

வெங்கதிர்ச்சுடர்மேவியதேர்ப்பரிக்
கலகுவன் தள்பிற்றகர்ந்திட்டன
தெங்கினினெண்பழத்தெள்ளமுதத்தினற்
பங்கமெய்தமுறுகின்புரமெலாம்

(இ-ள்) வெம்-வெவ்விய—கதிர்-கிரணங்களையுடைய—சுடர்-சூரியனானவன்—மேவிய-தங்கிய—தேர்-தேரிற்பூட்டிய—பரி-குதிரைகள

ளுடைய—வல்-வலிமை—தங்கு-தங்கிய—குளம்பில்-குளம்புகளாலே—தகர்ந்திட்டன-உடைபட்டனவாகிய—தெங்கின்-தென்னமரங்களுடைய—ஒள்-ஒள்ளிய—பழம்-கனிகளினது—தெள்-தெளிவுபொருந்திய—அமுதத்திரள்-நீரினாலே—மறுகின் வீதிகளினுடைய—பரப்பெல்லாம்-விரிவுகளெல்லாம்-பங்கம்-சேறுதலை—எய்தும்-அடையும்—எ-று (தெங்கிற்கும்சூரியமண்டலத்திற்கும்தொடர்புகற்பித்ததால்தொடர்புநவிற்சியணி;(கருத்து சூரியனதுதேரிற்பூட்டிய குதிரைகளுடையவன் காற்குளம்பால்உடைபட்டதேங்காய்களின்நீரினால்வீதிகள்சேறடையும் என்பதாம். (உகூ)

நிலவுவெண்கதிர்நீள்மணிமாடமேற்
றுலவுபாதிமதியைமென்கொம்பனார்
சிலைகொள்வாணுதல்சேர்த்தியவாடவ
ருலகமேத்துமுழுமதியென்பரால்,

(இ-ள்) நிலவு-நிலவை-செய்கின்ற-வெண்கதிர் சந்திர-னுடையமணி-மணிகளாகிய—நீள-நீண்ட—மாடமேல்-வீட்டின்மேலே—உலவு-விளங்குகின்ற—பாதிமதியை-பாதிசந்திரனை—மென்-மெல்லிய—கொம்பனார்-பூங்கொம்புபோல்வார்—சிலை-வில்வடிவத்தை-கொள-கொண்ட—வாள்-ஒளிபொருந்திய—நுதல்-தமது) நெற்றியோடு—சேர்த்திய-கூட்ட—ஆடவர் அதுகண்ட நாயகரானவர்—உலகம்உயர்ந்தோரால்—ஏத்தும்-துதிக்கப்படுகின்ற—உவாமதி-பூரணச்சந்திரன்—என்பர்-என்றுசொல்லுவார்-எ-று. (இதுபொதுமையணி) (கருத்து)வீட்டின்மேலிடத்துலாவிய பெண்கள்பாதிச்சந்திரனைப்பிடித்துத்தங்களுடையநெற்றியோடு சேர்க்க-அதுகண்டகணவர்கள் பூரணச்சந்திரனென்றுசொல்லுவார்கள்என்பதாம். (உஎ

புலவிநீக்கிப்புணர்முலைமாதர்தந்
நிலவுபூந்துகிலாடவர்நீக்கலு
நலம்விளைத்தனர்நாணிவெண்டிங்களின்
கலையைமெல்லக்கலையெனச்சேர்த்துவார்

(இ-ள்) ஆடவர்-கணவரானவர் — புலவி-பிணக்கை—நீக்கி-தீர்த்தது—புணர்-நெருங்கிய—முலை. முலைகளையுடைய—மாதர்-மகளிரது நிலவு-சந்திரிகைபோல்விளங்குகின்ற—பூ-அழகிய—துகில்-ஆடையை—நீக்கலும் அவிழ்த்தவளவில்—நாணி-வெட்கப்பட்டு—நலம்உதவியை—விளைத்தனர்(அவர்க்கு உண்டாக்கினவராக—வெள்-வெள்ளிய—திங்களின் சந்திரனது—கலையை-நிலவை—மெல்-மெல்லிய - அக்கலையென அவ்வாடை யென்றுநினைத்து—சேர்த்துவார் அவர் அரையிலே)சேர்ப்பார்—எ-று இதுநிலாவை ஆடையென்றுமயங்கலால் மயக்கவணி (கருத்து) கணவரானவர்கள் தங்கள்மாதர்கள் கலையை அவிழ்க்கமாத்திரத்தில அம்மாதர்கள்வெட்கித்தங்கள் கலையென்று சந்திரகலையை அரையிற்சேர்ப்பார்கள்-எ-ம். (உஅ)

பொருந்தருகனம்பூஞ்சிலர்பார்ப்பகை
சார்ந்துதம்முயிர்காதலர்பாற்செல்வார்

திருந்துவாண்முகந்திங்களென்றங்கிலா
வருந்தவந்தபுள்ளார்த்தலர்தூற்றுமால்

(இ-ள்) அனம்-அன்னங்களனைய—பொருந்தாது - தம்மருகிலடையாதிருக்க—பூ-அழகிய—சிலம்பு-சிலம்புகளது—ஆர்ப்பு-ஓசையானது—அற-நீங்கும்படியாக—கரந்து - மறைந்து—தம்முயிர்-தம்முயிர்போலும்—காதலர்பால் அன்பரிடத்து—செல்வார்-(மௌனச்)செல்லுகின்றமங்கையரது—திருந்து - திருத்தமாகிய—வாள் - ஒளிபொருந்திய—முகம்-முகத்தை—திங்களென்று-சந்திரனென்று நினைத்து—அங்கிலா அதனாநிலவை—அருந்த-உண்ண—வந்த-வந்த—புள்-சகோரங்களானவை—ஆர்த்து-ஒலித்து-அலர்தூற்றும்-வெளிப்படுத்தும்—எ-று (இதுமுகத்தைச்-சந்திரனென்றையங்கொளமயக்கவணி) (கருத்து நாயகமாரிடத்துமறைந்துசெல்கின்றமாதர்கள்முகத்தைச்சந்திரனென்றெண்ணி-அச்சந்திரகிரணங்களை உண்ணவந்தசகோரங்களானவைசத்தித்து அவரைவெளிப்படுத்தி யலர்தூற்றும்-எ-ம். (உகூ)

மலயமாதவனுண்டமணிக்குலைக
குலவுவார்கடலெனச்சொலிற்குற்றமே
யலகில்பல்வளஞ்சேர்த்தியவாவண
முலகமுண்டருண்மால்வயிறொக்குமே.

(இ-ள்) மலயம்-பொதியமலையிலிருக்கின்ற— மாதவன்-அகஸ்தியமுனிவனால்—உண்ட- குடிக்கப்பட்ட—மணி - மணிகளது—குலை-கூட்டத்தையுடைய—குலவு-விளைவாகிய—வார்-நெடிய—கடல்-கடலே—அலகில்-கணக்கில்லாத—பல்வளம்- பலவகையாகியவளங்களையும்—சேர்த்திய தன்னுள்ளடக்கிய ஆவணம் கடைக்கு—நேரொப்பென்று—சொலின்-சொன்னால்குற்றமே(அச்சொல்) குற்றமேயாம்—உலகம்-உலகத்தை-உண்டருள்விழுங்கியருளிய-மால் - திருமாலினது—வயிறு-வயிற்றை—ஒக்கும்(அது)ஒத்திருக்கும்(ஆதலால்)-எ-று (இதுசெய்யுட்குறியணி) (கருத்து கடலைக்கடைக்குவமைசொன்னாற்குற்றமாம்அக்கடை திருமால்வயிற்றையொத்திருக்குமென்பதாம் ௩௰)

நீடுமாவணத்திலப்பந்தருட்
கேடில்கம்பலையாலிசைகேட்கிலார்
பாடல்வண்டொடுநானம்பகர்ந்திடக்
கோடல்செய்வர்நிறைகுறைபயின்றென

(இ-ள்) நீடும்-நீண்டிருக்கின்ற நித்திலப்பந்தருள்—முத்துப்பந்தல்களிலுள்ள—ஆவணம்-கடைகளிலே — பாடல்-பாட்டுதலையுடைய—வண்டொடு வண்டுகளோடு—நானம் கஸ்தூரியை—பகர்ந்திட(விற்றுத்)விற்க,கேடில்(எப்போதும்)நீங்காத கம்பலையால் (சனங்கள்) வொலியினாலே, இசை(அப்பாட)லொலியைகேட்கிலார்,கேட்கிறதிலருமாகிவிற்ற- விற்கப்பட்ட பொருளிலே குறைவாதொரு குறையுமில்லென்றெனை இல்லையென்றுநினைத்து-கோடல்செய்வர்விலைக்குகொள்ளுவார்-எ-று, (இதுகஸ்தூரிக்கும்வண்டுக்கு விசேஷதொன்றுமையாலபொதுமையணி கருத்து)கடைகளிலே வண்டுகளுடனேகஸ்தூரியை விற்றுவிற்குமிடத்திரைச்சிலில்லைபெற்றுக்கொள்ளுவார்கள்-எ-ம். ௩௧

குளிர்பளிக்கு நீண்மாடக்கொடிகொள்வான்
வெளிமுகட்டுயர்வெண்மதிதோய்வன
வொளிகொள்வெங்கதிர்வெம்மைவொழித்திட
நளிகொண்சுதைநக்குவபோன்றவே

(இ-ள்) குளிர்-குளிர்ச்சிபொருந்திய — பளிக்கு-பளிங்கலாகிய — நீள்-நீண்ட — மாடம்-மாளிகைகளிற்கட்டிய — கொடிகள் - கொடிகளானவை வெளி-ஆகியவெளியினது — முகட்டு-முகட்டின்கண் — உயா-உயர்ந்த — வெண்மதி-சந்திரனை — தோய்வன-தடவுவன — ஒளி-சூரியனிலிருந்து — கொள் (தன்மேற்) கொள்ளப்பட்ட — வெங்கதிர்-உஷ்ணகிரணத்தாலாகிய — வெம்மை-வெப்பத்தை — ஒழித்திட-நீக்கும்படியாக — நளி-பெருமையை — கொள்-கொண்ட, தண்-குளிர்ச்சிபொருந்திய — சுதை-அச்சந்திரனிடத்துள்ள)அமுதத்தை — நக்குவ-நாக்குகளினாலேநக்குவன — போன்றவேயாயிருந்தன — எ-று (இது பொருட்குறிப்பணி) (கருத்து) சந்திரனை அளாவியகொடிகளானவை வெண்கதிர்க்காங்கலைகளிங்கி—த்தண்கதிரைநக்குவபோன்றிருந்தன-எ-ம (கஉ)

பத்திமாடமணிக்கொடிபானுவின்
மெய்த்தழும்புறத்தைவரல்வெங்கதிர்
கைத்தலங்களிற்காளிந்திடைமடி
வைத்திருந்துதாலாட்டுறமானுமே

(இ-ள்) பத்திஒழுங்காயுள்ள — மாடம்-மாளிகையினது — மணிக்கொடி-நீலக்கொடியானது — பானுவின்-சூரியனது — மெய்-உடம்பிலே — தழும்புற-தழும்புபொருந்த — தைவரல்-தடவுதலால், வெங்கதிர்-அச்சூரியனானவன், காளிந்தியை காளிந்தியென்பவளை, கைத்தலங்களில்-கைகளினாற்பற்றி, மடி-மடியின்மேல் — வைத்திருந்து-வைத்துக்கொண்டிருந்து — தாலாட்டுதல்-தாலாட்டுகிறதை — மானும்-ஒக்கும் — எ-று. (இது பொருட்குறிப்பணி) (கருத்து) நீலக்கொடியானது சூரியனைத்தடவுதல்சூரியன்தன்மகளாகிய-காளிந்தியைதாலாட்டுதல்போலிருந்தது என்பதாம். (கங)

யாணர்மேயவிரவியைநண்பகற்
காணுந்தோறுங்கனன்றுகலுமிழ்
கோணைவெம்மணிக்கொம்மையெயிற்புறம்
வாணனூரழல்சூழ்பின்மானுமே

(இ-ள்) இரவியை-சூரியனை — நண்பகல்-நடுப்பகலிலே — காணுந்தோறும்-பார்க்குந்தோறும் — கனன்று-எரிந்து — கனல்-நெருப்பை உமிழ்-சொரிகின்ற-புறம்-புறத்தையுடைய, கோணை-அழிபாக, வெம்மணி—சூரியகாந்தக்கலாகிய — யாணர்-தச்சரால் — மேய-விரும்பிச்செய்யப்பட்ட — கொம்மை-வலயமாகிய — எயில்-மதிலானது — வாணன்-வாணனூரானது — சூழ் (சோணிதபுரத்தைச்) சூழ்ந்த — ஆரம்பித்தநெருப்பமயமாகிய — எயில்-மதிலை — மானும்-ஒத்திருக்கும் — எ-று, (இதுவுவ

மையணி (கருத்து) சூரியகாந்தகற்களாற் செய்தமதிலானது சூரியனைக் கண்டக்கினிக்கல்லால் வாணுரூரான் கோட்டையை யொக்குமென்பதாம், ()

உள்ளமொன்றுதங்காதலரோதிய
கள்ளனேயக்கலவியின்வாய்மையை
வள்ளவாய்மதுவுண்டுகிளர்மடக்
கிளிகள்மெல்லக்கிளத்தலுநாணுவார்.

(இ-ள்) உள்ளமொன்று-ஒருமனப்பட்ட—தம்-தங்களுடைய—காதலர்-நாயகரால்—ஓதிய-சொல்லப்பட்ட-கள்ளம் (தம்மிருவருக்குள்ளே) மறைக்கத்தக்க—நேயம்- அன்புபொருந்திய—கலவியின்புணர்ச்சியினுடைய—வாய்மையை-சொல்லுதலை—வள்ளவாய்- கிண்ணத்தினிடத்தே தங்கிய—அமுது-பாலை—உண்டு-குடித்து—கிளர்- வளர்கின்ற—மடம்-இளமைபொருந்திய—கிள்ளை-கிளிகள்—மெல்ல-மெள்ள—கிளத்தலும் (பிறரறியச் சொல்லுதலும்—நாணுவார் (மங்கையர்) வெட்கப்படுவார்—எ-று (கருத்து) தங்கள் புருஷர்கள் சொல்லியபுணர்ச்சிசொற்களைக் கிளிகள் சொல்லக்கேட்டுமாதர்கள் நாணமடைவார்கள் என்பதாம ()

வாணிலாமணிமாடத்தொளித்தெமைக்
காணுகென்பதர்மெய்ந்நிழல்கண்ணுறீஇப்
பூணுலாமுலையார்புலவியின்மையின்
நாணிநின்றுநகைமுகங்கோட்டுவார்

(இ-ள்) பூண்-ஆபரணங்கள்—உலாம்-புரளுகின்ற—முலையார்கொங்கையுடையமகளிரானவர்—வாள்-காந்திபொருந்திய—நிலாமணி-சந்திரகாந்தக்கல்லாகிய—மாடத்து- வீட்டினுள்ளே—ஒளித்துமறைந்து—எமை-எங்களை—காணுகென்பவர்-காண்பீராகவென்றழைப்பவரது—மெய்-உடம்பினது—நிழல்-சாயையை—கண்ணுறீஇ - கண்டு—புல்வியு-அச்சாயலைத்தழுவி—இன்மையின்-கைக்கப்படாமையினாலே—நாணி-வெட்கப்பட்டு—நின்று-நின்று,நகை-நகையோடு கூடிய,முகம்-முகத்தை—கோட்டுவார்—வளைப்பார்—எ-று இதுமயக்கவணி) (கருத்து) நிலமணிமாடத்தொளித்துக் கொண்டகணவர்களதுநிழலைக்கணவனென்றுதழுவியமாதர்களநாணமடைவார்கள்,-எ-ம, (௩௪)

சாந்தமூழ்கிவளர்ந்ததடமுலைக்
காந்துபன்மணிமேகலைக்காழல்குல்
ஏந்திவிண்ணிடையியங்கலரிதெனுப்
போந்தமங்கையரிந்நகர்ப்பொன்னனார்

(இ-ள்) இந்நகர் - இந்நகரத்துள்ள—பொன்னனார் - சீதேவிபோல்வார்—சாந்தம்-சந்தனத்துள்—மூழ்கி முழுகி—வளர்ந்த பருத்ததடமலைபோலும்—முலை-முலைகளையும்—காந்து-விளங்குகின்ற பன்மணி-பலமணிகளாகிய,மேகலை-மேகலையின்,காழ்-சரங்களையுடைய அல்குல்-அல்குலையும்,ஏந்தி-சுமந்துகொண்டு,விண்ணில், வானத்திலே இயங்கல் - உலாவுதல், அரிதெனு - எம்மாலே முடியாதென்று

வினைத்து—போந்த-இரங்கிவந்த—மங்கையர்- தெய்வமகளிரே—என்று (இது பொருட்டற்குறிப்பணி) (கருத்து) தனக்கையும் அல்குலேயுஞ்சுமந் துலாவலரிதென்று பொன்னகரமாதர்களே இந்நகரமாதர்களாகவந் தார்களென்பதாம். (௩௭)

கலிவிருத்தம்.

வளமலிபிந்நகர் மன்னர்மன்னவன்
றளையவிழ்நறுமலர்த்தண்ணந்தாரினன்
களைகணுபுலகொருமூன்றுங்காசதரு
ளளனெனப்பெயரியநாமவேலினன்

(இ-ள்) உலகொருமூன்றும்-(தன்னேயுச்சரிக்கின்ற) மூன்றுலகத்தாரையும்—களைகணுய்-ஆதாரமாய்—காத்து (ஆபத்தினின்றுங்) காத்து, அருள- விரும்பப்பட்டவற்றைத் தருகின்ற—நளனெனப்பெரிய - நளனெனப்பெயர்பெற்ற—வளம்-செல்வத்தினலே—மலி- நிறைந்த—இந்நகர் - இம்மாவிந்தநகரத்துள்ள— மன்னர்மன்னவன் - அரசர்க்கரசனானவன்—தளையவிழ் - தட்டவிழ்ந்த—நறு - நல்ல—மலர் - மலர்களாகிய—தண்-குளிர்ச்சிபொருந்திய—தாரினன்- மாலையையுடையவன்—நாமம்-அச்சஞ்செய்கின்ற—வேலினன்- வேற்படையையுடையவன்-எ-று, (கருத்து) இம்மாவிந்தநகரத்தையாளும் அரசர்க்கரசன் மூன்றுலகத்தையுங்காத்தருள்செய்யும் நளனென்னும் பெயரையுடையவன் என்பதாம் இதுமுதல் (ரு பாடல்கள் நளன்சிறப்பு, (௩௮)

ஒன்னலர்மணிமுடியுரிஞ்சுதாளினன்
கன்னவிறெளினன்கமலக்கண்ணினன்
றன்னுயிராமெனவுலகிற்றங்கிய
மன்னுயிரனைத்தையும்புரக்குமாட்சியான்.

(இ-ள்) ஒன்னலர்-பகைவரது—மணி- நவமணிகளையுடைய—முடிமகுடங்கள்—உரிஞ்சு-தேய்தற்குக்காரணமாகிய—தாளினன்-அடிகளையுடையவன்—கல்-கல்லோடு—நவில்-பழகிய—தோளினன் - புயங்களையுடையவன்—கமலம்-தாமரைமலர்போலும்—கண்ணினன்- நேத்திரங்களையுடையவன்—தன்-தனது—உயிராமென - உயிர்போலநினைத்து—உலகில்-உலகினிடத்து—தங்கிய-பொருந்திய—மன் - நிலையுள்ள—உயிரனைத்தையும்-எல்லாவுயிர்களையும்—புரக்கும்-காப்பாற்றுகின்ற- மாட்சியான்-பெருமையையுடையவன்—எ-று. (கருத்து) பகைவர்முடி படுந்தாட்களையுங்கல்லோடு பழகியதோட்களையும் தாமரைநிகர்கண்களையுடையவன்தன்னுயிரைப்போலு மன்னுயிரைக்காப்பவனென்பதாம், ()

போருசிலேவேனில்வேளனையபொற்பினு
னுருவனையாமெனவகன்றமார்பினன்
கருபொருமுடைத்திரைக்கடலந்தானையாள
திருநுவெஞ்சினக்களிறனையசீற்றத்தான்.

(இ-ள்) போரு-போர்செய்கின்ற—சிலே (கருப்பு வில்லேயுடைய—வேனில்-வசந்தகாலத்துக்குரிய—வேளனைய - மன்மதனைப்போலு—ம்

பொற்பினன்-அழகினையுடையவன்—உரு- அரிய—வரையாமென - மலை
யைப்போலும்—அகன்றபரந்த - மார்பினன்—மார்பினையுடையவன்-க
ணை-கணையோடும்—பொரு-போர்செய்கின்ற—முடை-புலானாற்றம்பொ
ருந்திய—திரை-அலைகளையுடைய—கடல்-கடல்போலும்—தானையான்
சேனைகளையுடையவன்—இருந-வஞ்சனையும்—வெஞ்சினம்-வெவ்விய
கோபத்தையுமுடைய—களிறனைய - களிறுபோலும் — சீற்றத்தான்-
கோபத்தையுடையவன்—எ-று, (கருத்து மன்மதனை நிகரழகையும்ம
லையை நிகர்மார்பையும் கடலை நிகர் சேனைகளையும் யானையை நிகர்கோப
த்தையுமுடையவன் என்பதாம். (௬௰)

வெங்கலியிருள்கெடவெண்ணிலாவுமிழ்
திங்களங்கவிகையான்றிகிரியொன்றினு
லங்கணமாநிலமுழுதளிக்குமாற்றலான்
மங்குலினெழுமடங்குதவும்வண்கையான்,

(இ-ள்) வெங்கலி-தீயவறுமையாகிய—இருள்-இருளானது—கெட-அ
ழிய—திங்கள-சந்திரன்போல—அம்- அழகிய—வெண்-வெள்ளிய—நி
லா-நிலவை— உமிழ் வீசுகின்ற—கவிகையான்-குடையையுடையவன்—
திகிரியொன்றினால்-ஏகசக்கரத்தினாலே—அங்கண-அழகியவிடத்தையு
டைய —மா-பெரிய—நிலமுழுதும்-பூமியனைத்தையும்—அளிக்கும்- அ
டைகின்ற—ஆற்றலான்-வல்லமையுடையவன் — மங்குலின் - மேகத்
திலும்—எழுமடங்கு ஏழுபங்கதிகமாக—உதவும்-கொடுக்கின்ற—வண்
மையும்பொருந்திய—கையான்-கையையுடையவன்—எ-று, (கருத்து உ
லகெலாமொருகுடையிலாள்பவன் மேகத்தைப்பார்க்கிலும் ஏழுபங்க
திகமாகக்கொடுக்குங்கையையுடையவன்என்பதாம், ௬௧)

அருளினதுறையுணல்லறத்தின்வேலிசொற்
றெருளுறுகல்வியந்தெய்வமாக்கடல்
குரைகடற்புவிபுகழ் குணக்குன்றஞ்சுட
ரெரிதவழலங்கல்வேலரசரேறனான்,

(இ-ள்) அருளினது-கருணையினது, உறையுள்-வீடாயுள்ளவன், நல்ல
றத்தின் - நல்லதருமமாகிய பயிரினது, வேலி-வேலியாயுள்ளவன் —
சொல்-நூல்களாலே, தெருளுறு பலவகைப்பொருள்களையும அறிந்த,
கல்வி-கல்விக்கு, தெய்வம தெய்வத்தன்மைபொருந்திய, மாக்கடல் பெ
ரியகடலாயுள்ளவன், குரை-ஒலிக்கின்ற, கடல்-கடல்போல, புவி-பூமியி
லுள்ளோரால், புகழ்-புகழப்படுகின்ற—குணம்- நற்குணங்களெல்லாஞ்
சேர்ந்த, குன்றம்மலையாயுள்ளவன், சுடர்-ஒளியையுடைய, எரி-நெருப்
பானது, தவழ்-தவழ்கின்ற, அலங்கல்-மாலைதரித்த, வேல்-வேலையுடை
ய, அரசர்-பகையரசராகிய யானைகளுக்கு) ஏறனான்-ஆண்சிங்கம்போல்
பவன்—எ-று, (கருத்து) கிருபைக்கு வீடானவன் தருமத்திற்குவேலி
யானவன் கல்விக்குக்கடலானவன் குணத்திற்குக் குன்றானவன் பகைம
ன்னர்க்குச் சிங்கமானவன்என்பதாம் (௬௨)

நகரப்படலம்-முற்றிற்று,

உ

சிவமயம்,

அன்னத்தைக்கண்ணுற்றபடலம்.

அதுகாலது-நளமகாராஜன், அன்னத்தைகண்டதாம்,

கலிநிலைத்துறை,

இன்னதன்மையனாகிய தெங்கெழிலணிதோள்
மன்னர்மன்னவன்மாணெழில்வகைநலங்கேட்டுக்
கன்னலஞ்சுவைகனிந்தசொற்றமயந்தியென்னும்
பொன்னங்கொம்பனையவளெலாம்மவைகளும்புலம்பும்,

(இ-ள் கன்னல்-சர்க்கரையைப்போல — அஞ்சுவை மதுரச்சுவையினாலே, கனிந்த முதிர்ந்த — சொல்-சொல்லையுடைய, தமயந்தியென்னும்-தமயந்தியென்கிற — பொன்னங் கொம்பனையாள்-கற்பகப்பூங்கொம்புபோல்பவள் — இன்ன- இப்படிப்பட்ட — தன்மையனாகிய-குணாதிசயங்களையுடையவனாகிய, தெங்கு-பூமிபாரத்தை தாங்குகின்ற, எழில்-அழகும், திணி-வலிமையும்பொருந்தியதோள் - தோள்களையுடைய, மன்னர்-அரசர்களுக்கு, மன்னவன்-அரசனாகியநளனது மாண்குணங்களையும், எழில்-அழகினது, வகை-வகைகளையும், நலம்-செல்வத்தையும் கேட்டு- (அறிந்தோர் சொல்லக்கேட்ட, மயலோடும்-மயக்கத்தோடும், அவைகளும் இனந்தோறு, புலம்பும் புலம்புமாம்-எ-று, தொல்காப்பியம் வினையியல்-கூ-ம் சூ பல்லோர்படர்க்கை முன்னிலை தன்மை அவ்வயின் மூன்றும் நிகழுங்காலத்துச்-செய்யுமென்னுங் கிளவியொடு கொள்ளா, இவ்விதிமாறு புலம்புமென்றது புலம்புவாள்-என்றபடி, கருத்து) தமயந்தியானவள் நளனது குணாதிசயங்களைக்கேட்டு மயலுற்று புலம்புவாள்-என்பதாம். (இதுமுதல்-கூ-பாடல் தமயந்தி காமச்செய்கை கூறல்,) (க)

தாதளைந்தினவண்டிசைக்கும்பைங்குழற்றைய
லேதமற்றதன்னெழிற்கிணையாமெனவெண்ணி
யாதரத்தின்வேளணையிற்பயினெஞ்சகனைத்
தூதுவிட்டனடோன்றல்பாற்றுறந்தனடுயிலே

(இ-ள்) இனம்கூட்டமாகிய, வண்டு-வண்டுகளானவை, தாது-மலர்ப்பொடியை, அளைந்து-பூசி, இசைக்கும்-பாடுதற்கிடமான, குழல்-கூந்தலையுடைய, தையல்! தமயந்தியானவள் - ஏதமற்ற-குற்றமற்ற, தன-தனது, எழிற்கு-அழகுக்கு, இணையாமென- இவனழகுக்குத் தகுதியாமென்று-எண்ணி-நினைத்து, ஆதரத்தின் - ஆசையினாலே — வேள்-மன்மதனது — அணையில்-அம்பினையிலே — பயிலும்-தங்குகின்ற — நெஞ்சகனை(தன் மனத்தை — தூதாக — தோன்றல்பால்- அரசனிடத்திலே — விட்டனள்-அனுப்பினவளாகி — துயிலே-நித்திரையை — துறந்தனள்-யிழந்தாள்-எ-று. (கருத்து)

தமயந்திதன்மனத்தைநளனிடத்துத் தூது விட்டனள் அதனுல்நித்திரையைவிட்டாள்-எ-ம். (௨)

மின்னிலங்குமேனளன்பெயர்கேட்டிடுமெனிழைவாற்
பொன்னினவார்கழல்விதர்ப்பன்கோன்பேரவைபோந்து
மன்னரியாரினும்வந்தியர்நி—தனைதெரிப்ப
வன்னவன்புகழ்கேட்டலும்புளகமுற்றயரும்,

(இ-ள்) மின்-மின்னல்போல (இலங்கு) விளங்காநின்ற—(வேல்-வேலையுடைய—நளன்,நளமகாராஜனது—பெயர்-நாமத்தை—கேட்டிடும்-கேட்கவேண்டுமென்கிற—விழைவால்-ஆசையினுலே—பொன்னின், பொன்னுலாகிய—வார்-நீட்சிபொருந்திய—கழல்-வீரக்கழலையுடைய—விதர்ப்பகோன்-விதர்ப்பதேசத்தாருடையவரசனது—பேரவை-பெரியசபையினிடத்துப்போந்து அவனைத்தொழுதற்குச்செல்கின்றவள்போலச் சென்று,மன்னரியாரினும் அரசபலரினும் - வந்தியர்-புகழ்வோராகியவர்-களிடத்தேசத்தரசனை,எத்தொடுப்பஅதிகமாகப்புகழ,அன்னவன், அப்பாப்புகழ்பெற்றவரசனது—புகழ்-கீர்த்தியை —கேட்டலும்-கேட்டவளவிலேயேபுளகம்-மெய்ம்மயிர்சிலிர்த்தலை—உற்று-அடைந்து,அயரும் சமயந்தி வாடுவாள்,-எ-று. (கருத்து) தமயந்திதன்பிதாவின்அவையிற்சென்றுவந்தியர்நளனைப்புகழக்கேட்டுவருந்துவாளென்பதாம் * தொகைகாப்பியம்வார்தலைபோக லொழுகன்மூன்றுநேர்ப்பு நெடுமையுஞ்செய்யுட்பொருள, (௩)

அறுசீர்க்கழிநெடிலடிவிருத்தம்.

அநங்கனையொழியாமண்ணிலாடவற்றெரிதிரென்னுக்
கனங்குழையவரானமன்னர்க்கொருகுற்றங்காட்டி
இனஞ்செல்வணமிருந்தண்டார்நளனலாதில்லையென்று
மனங்களித்துரைப்பக்கேட்டுமையமார்நோயுழக்குமாதோ,

(இ-ள்) அநங்கனை-மன்மதனை—ஒழியா ஒழித்துமண்ணில்பூமியின்கண்—ஆடவன்ஒருகாளையை—தெரிதிரென்னு-ஆராய்ந்தெடுங்களென்றுசொல்லி—கனம்பொருந்திய—குழையவரால் காதணியையுடையமகளிராமல்—மன்னர்க்கு மற்றையரசர்களுக்கு-ஒவ்வொருகுற்றம் ஒவ்வொருகுற்றத்தை—காட்டிட சொல்லித்து—இனஞ்செய-கூட்டஞ்செய்கின்ற—வண்டு-வண்டுகளானவை—இமிரும் ஒலிக்கப்பெறுகின்ற—தண்-குளிர்ச்சிபொருந்திய—தார் மாலையையுடைய—நளனலாது-நளராஜனல்லாமல்—இல்லையென்ற(ஒருவனு)மில்லையென்று—மனம் நெஞ்சத்தில்—களித்து மகிழ்ந்து—உரைப்ப அவர்)சொல்ல—கேட்டு(தான்)கேட்டுமையமார்மயக்கமாகியநோய்-நோயிலே—உழக்கும் தமயந்தி)வருந்துவாள-எ-று இலக்கணக்கொத்துஒழிபியல்-௰௩-அ-அந்நிகுவிவருமொழி-பொருளோமின்மைபிறிதமறையினு ளொன்றுக்குமிவ்விதியால் அநங்கிலைலதநங்கன்என்றாயிற்று(கருத்து)நளனேஅழகுள்ளவனென்று மாதர் சொல்லக்கேட்டுத் தமயந்திவருந்துவாளென்பதாம், (௪)

...ளைவாய்கழுகிற்றுவிப்புகடுழஞ்சிதறிவாளை
...ரதாமன்னயிற்றுஞ்சுந்தண்பணைகிடதகாட்டி,

வீன்வளங்கேட்பாள்போலக் சூதர்பாலிருபன் சீர்கேட்
டாளிமொய்ம்பின்னையெண்ணியணிமுலைநோக்கிச்சோரும்.

(இ-ள்) பாளை பாளைகளானவை — வாய் - பொருந்திய — கமுகில்-பாக்குமரத்தின்மேலே — தாவிய-பாய்ந்து — படிகுலைகளிலுள்ள - பழம்கனிகளை — சிதறி-உதிர்த்து — வாளை - வாளைமீன்களானவை — தடம்-தானத்தையுடைய — தாமரையில்-தாமரைமலர்களிலே — துஞ்சும்- தூங்கப்பெறுகின்ற — குலம்-தண்ணிய — பணை-கழனிகளையுடைய- நிடதநாட்டின் நிடததேசத்தினது — நீள்வளம்-பெரியவளத்தை — கேட்பாள்போல்-கேட்பவள்போல — சூதர்பால் அங்கிருந்துவந்து) புகழ்வோரிடத்து — நிருபன்-அரசனது — சீர் கீர்த்தியை — கேட்டு - கேட்டறிந்து — ஆளி-சிங்கம்போலவனுடைய — மொய்ம்பு- தோள்களாகிய — இன்னை - இணைத்தனை எண்ணி-நினைத்து — அணி-ஆபரணங்களையுடைய — முலை (தன் முலைகளை — நோக்கி - பார்த்து — சோரும் - (தமயந்தியானவள்) வாடுவாள — எ-று. (இதுபிறிதினவிற்சியணி) (கருத்து) தமயந்திபுகழாளரிடத்து நிடதநாட்டுவளங் கேட்பவள்போல நளன் சீர்த்தியைக்கேட்டு அவனைச் சேரக்கனதனங்களைப்பார்த்துவருந்துவாள்என்பதாம், (௮)

ஓவியத்துறைகைபோய்வொருவனையுருவின்மிக்க
காவலனொருவன்மற்றோர்கன்னிநீதீட்டென்னத்
தாவருமெழிலிற்கோட்டத்தானுமன்னனுமாகி
மேவரவினிதினோக்கிமெய்ம்மயிர்பொடிக்குமன்றே.

(இ-ள்) ஓவியம்-சித்திரவித்தையினது — துறை- வழியிலே — கைபோல்- வல்லவனாகிய — ஒருவனை-ஒருவனைப்(பார்த்து) — உருவின்-அழகினாலே — மிக்க-(யாவரிலும்) மேற்பட்ட — காவலனொருவன் - ஒருஅரசகுமாரனையும் — மற்றோர்-வேறொரு — கன்னி-கன்னிகையையும் — நீதீட்டென்ன-நீயெழுதகவென்று சொல்ல-தாவரும்- வருத்தஞ்சேர்தலில்லாத — எழிலில்-சித்திரசாலையிலே — கோட்ட- அவ்விருவர்வடிவங்களையுமவனெழுத — தானும்- விரும்பிய தானும் — அன்னனுமாக விரும்பப்பட்ட) அன்னராஜனுமாக — மேவர- பொருந்த — இனிதின் - இனிதாக — நோக்கி-பார்த்து — மெய்-உடம்பிலுள்ள — மயிர் மயிர்களானவை — பொடிக்கும்-சிலிர்க்கப்பெறுவாள் (தமயந்தியானவள்) — எ-று. (கருத்து) சித்திரமெழுதிக்கொடுத்த இருபடங்களையுந்தமயந்திபார்த்துப் புளகமடைந்தாள் என்பதாம். (௯)

வள்ளற்றாரகலந்தன்னில்வனமுலைதிளைக்கவென்று
முள்ளத்தான்கனவிற்காணுமொழிந்தநாளுளதோகங்கு
லள்ளிற்கூற்றுயிலிகாணுநற்பொழுதுளகாணுமெல்லா
மௌளத்தான்விதியாற்கூட்டுஞ்செயலினைவிலக்கலாமோ.

(இ-ள்) வள்ளல்-நளமகாராசனது — தார்-மாலையையுடைய — அகலந்தன்னில்-மார்பினிடத்தே — வனம் -சித்திரத்தையுடைய — முலை- முலைகளானவை — திளைக்க-அழுந்தாநிற்க — என்னும் (அவனை) நினைவிட்டு-நினைக்கின்ற — உள்ளத்தான் - மனத்தையுடைய தமயந்தியானவள் —

கனவில்-சொப்பனத்திலே—காணுது-காணுதிருக்க—ஒழிக்தநாள்- கழிந்தநாளும்—உளதோ-உண்டோ—(இல்லை) காணு (நான்) காணப்படாமல்—நல்-நல்ல—பொருள்-ஒருபொருளை—கனவல்- இரவினது—நகில்-நகிலிலே—கூர்-செய்யப்பட்ட—துயிலில்-நித்திரையினல்—காணுங்கொல்-(ஒருவன் காண்பானே—வெனின்) விதியால் - ஊழினல்—கூட்டும்-(அதனைக்) கூட்டுகின்ற—செயலினை-(அந்தநித்திரையின் செய்கையை—மெள்ளத்தான்-விரையாமலேனும்—விலக்கலாமோ (அசம்பவமென்று) விலக்குதலாமோ-ஆகாது—எ-று, (கருத்து) தமயந்தி நளனைக் கனவிற்கண்டொழிந்தாளில்லை கண்ணிற்காணுதபொருள் கனவிற்காணுது காணுதநளனைக்கனவிற்கண்டது விதிகூட்டுஞ்செயலென்பதாம்,()

கட்புலனென்னுந் தூயகதவடைத்திதயமேய
வுட்புலனொடுங்கநோக்கியுறு துயிலென்னுந்தோழி
புட்குலஞ்சுழலும்வைவேலிறையெழிற்பொலிவுகாட்டு
முட்பொதிபசுந்தாட்செய்யமுளரிபோன்முகத்தினுட்கே.

(இ-ள்) தூயநீர்த்துகளிகளைத்தூவிய—கட்புலனென்னும் - கண்ணைமைகளென்கிற—கதவு-கதவுகளை—அடைத்து-சாத்திக்கொண்டு—இதயம்-நெஞ்சமாகிய(தன்வீட்டின்)மேய்தங்கிய—உட்புலன்-மனமானது—ஒடுங்க-அடங்க—நோக்கி- உச்சமயம்பார்த்து—உறு- இடைந்த—துயிலென்னும்-நித்திரையென்கிற—தோழி-பாங்கியானவள்—புட்குலம்-பறவையினமானது—சுழலும்-வட்டமிடப்பெறுகின்ற—வை-கூர்மைபொருந்திய—வேல்-வேலையுடைய—இறை-நளமகாராசனுகிய—எழில்- அழகினது—பொலிவு-பெருக்கத்தை—முள - முள்ளுகளாலே—பொதி-நிறைந்த—பசு-பசிய—தாள்- தண்டையுடைய—செய்யமுளரிபோல்-செந்தாமரைமலர்போலும்—முகத்தினுட்கு-முகக்கையுடையதமயந்திக்கு காட்டும்-காண்பிப்பாள்—எ-று (இது உருவகவணி) (கருத்து) நித்திரையென்னும் பாங்கியானவள் நளனது அழகைத்தமயந்திக்குக்காட்டுவாளென்பதாம். (அ)

தாமரைமுகங்கள்வாட்டுந்தண்பனிக்காலந்தன்னிற்
காமர்வெம்பகனீட்டக்கதண்ணமுங்கணவர்த்தீர்ந்தோ
ரேமுறுவேனிற்காலமிரவுநீட்டித்தவாறுந்
தூமமென்கூந்தற்செவ்வாய்துடியிடைதயரவன்றோ

(இ-ள்) தாமரை-தாமரைமலர்களுடைய—முகங்கள்-முகங்களை—வாட்டு-வாடச்செய்கின்ற—தண-தண்ணிய-பனிக்காலம் - பனிக்காலமான து—தன்னில்-தன்னிலே—காமர்-அழகிய—வெம்பகல் - வெவ்வியபகலை—நீட்டித்தவண்ணமும்-நீளவித்தபடியும்—கணவர்(தம்முடைய) நாயகரினின்றும்—தீர்ந்தோர் - நீங்கினமாதர்—ஏமமையலை—உறு- அடைதற்குக்காரணமாகிய—வேனிர்காலம்-வெயிற்காலமானது(தன்னில்) தன்னிலே—இரவு-இரவை—நீட்டித்தவாறும்-நீளவித்தபடியும்—தூமம்-புகைபோலும்—மென்-மெல்லிய—கூந்தல்- கூந்தலையும்—செவ்-செய்ய—வாய்-வாயையும்—துடி-உடுக்கைபோலும்—இடை- இடையையுமுடைய-தமயந்தியானவள—துயர - துயரப்படுதற்கேபோதும்—அ

யினும்—இன்றி-இல்லாமல்—வேறொன்றால்- வேறொருகாரணத்தால், மறைக்கும்-(பிறக்குஅதனை) மறைப்பான்—மறம்-வீரத்தன்மையினால், கிளர்-விளங்காநின்ற—வேல-வேல்போலும்—கண்-கண்களையுடைய—மாதின்-தமயந்தியினது—உருவெளி-(பிராந்தியால்) வெளியிலேதோன்றுகிறவுருவத்திற்கு—வயத்தனாகி-வசப்பட்டவனாகி—சுறங்கின-காற்றாடிபோல—திருநுக-மனமானது—உலமு-சுழல—அன்னாட்கு-அப்பொய்யாகத்தோன்றுகிறதமயந்திக்கு—பெட்பால்- ஆசையால்—உரைப்பது-சொல்வதைமாத்திரம்—கரக்கமாட்டான் - மறைக்கமாட்டான்—எ-று.

(கருத்து) பிறரறியாமல் காமத்தைமறைக்கும் நளமகாராஜன் உருவெளித்தோற்றத்தமயந்தியோடு பேசுவதைமறைக்கமாட்டான். (௰௯)

பொறிவழியுள்ளம்போக்காப்புரவலன்காமநோயை
மறைசெயமறையாதாமம்மரினாணுட்கொள்ளா
வுறைகழலவனிவேந்தர்நெருங்குபேரவையினீங்கி
நறைகமழ்சோலைசொல்வானுளத்தினினயத்தல்செய்தான்.

(இ-ள்) பொறி-ஐம்பொறிகளது—வழி-வழியினாலே—உள்ளம்-மனத்தை—போக்கா-செலுத்தாத—புரவலன்-அரசனானவன், காமநோயை-காமவியாதியை—மறைசெய - வேறுகாரணங்களால்மறைக்க—மம்மரின்-உன்மத்தத்தினாலே—மறையாதாக-வெளிப்பட—நாண் - நாணத்தை, உட்கொள்ளா-உள்ளேகொண்டு—அறை-ஒலிக்கின்ற—கழல்- வீரக்கழலையுடைய—அவனி-பூமியிலுள்ள—வேந்தர்-அரசர்களானவர்கள், நெருங்கு-நெருங்கப்பெற்றிருக்கின்ற—பேரவையின் - பெரியசபையினின்றும்—நீங்கி-நீக்கி—நறை-தேனானது—கமழ் - மணக்கப்பெற்ற—சோலை-தனதுசிங்காரவனத்திற்கு—செல்வான்-போகும்படியாக—உளத்தினில்-மனத்தினிடத்தே—நயத்தல்செய்தான்- அவன்விரும்பினான்—எ-று.

(கருத்து) நளமகாராஜன் காமத்தைமறைக்க அக்காமம்வெளிப்பட வெட்கங்கொண்டு சபையைவிட்டு நந்தவனத்துக்குப்போக விரும்பினான் என்பதாம், (௨௰)

கொட்புறவுலவுந்தோறுங் குரத்தடைதுகளின்குப்பை
நட்பமாரணுக்களென்னு நலவருமனத்தின்கூட்டம்
கட்புலன்கதுவிலசெல்லாக்கற்பினைக்காப்பான்காலைப்
பெட்புறப்பிடித்தல்போலப் பிறங்குமாக்கொணர்மினென்றான்.

(இ-ள்) கொட்புற-சுழற்சிபொருந்த—உலவுந்தோறும்-சஞ்சரிக்குந்தோறும—குரத்து-குளம்புகளினின்றும்—அடை - கால்களையடைகின்ற—துகளின்-புழுதியினது—குப்பை-கூட்டமானது—கட்புலன் கண்ணறிவிற்கு—கதுவல்செல்லா-பற்றுதல்கூடாத—கற்பினை-வேகத்தை காப்பான்-காக்கும்பொருட்டு-காலை-கால்களை—பெட்புற - ஆசைமிக—பிடித்தல்-பிடித்தலையுடைய—நட்பமார் - நண்மைபொருந்திய—அணுக்களென்னும்-அணுக்களென்கிற—நலவரும்- சொல்லக்கூடாத—மனத்தின்-மனங்களது—கூட்டம்-கூட்டத்தை—போல- ஒத்துத்தோன்றிநிற்க, பிறங்கு-விளங்குகின்ற—மா-குதிரையை—கொணர்மின் - கொண்டுவாருங்கள்—என்றான்-என்றுசொன்னான் அரசன்—எ-று. (தருக்கசங்கிர சூத்திரம்) மனம் அணுவென்பதற்குவிதி - இன்பமுதலியபண்புரத்த

ருவுங், கருவிபாய்பொறிமனமஃதுயிர்தோறின்றியமையாது வேண்ட
விற்பலவா, மனுவாய்நிற்கு மென்மனுர்புலவர் (கருத்து) நளன்குதிரை
யைக்கொண்டுவாவென்றான் என்பதாம். (உக)

பன்னகஞ்சுமக்கவைப்போர் தோளினிற்பரிக்குமன்னர்
மன்னனைப்பரிப்பல்யானோ வருகதிரிரவிதன்னை
என்னைநீர்தாங்குமாறென் றேழ்பகயினைநக்கென்ன
மின்னுளிவிரிக்கும்வெண்பற கூந்தன்மாமேற்கொண்டானே.

(இ-ள்) பன்னகம்-ஆதிசேஷனுலே—சுமந்த (ஆயிரந்தலைகளாலே)சு
மக்கப்படுகின்ற—வைப்பு-பூமியை—ஓர்தோளினில்-(தன) தொருதோ
ளினுலே—பரிக்கும்-தாங்குகின்ற—மன்னர்- மன்னனை—அரசர்க்-ரசனை
னை—யானே-நான்தனியாக—பரிப்பல-சுமக்கவல்லேன்—வரு- வகரு
ன்ற—கதிர் - கிரணங்களையுடைய—இரவிதன்னை-சூரியனை—நீர்- பல
வாகிய) நீங்கள்—தாங்குமாறு-தாங்குஞ்செய்கை—என்னை-எத்தன்மை
த்து—என்று-என்று—பழித்து - ஏழுபரியினை- அச்சூரியனதுதேரினு
டைய) ஏழுகுதிரைகளைப் பார்த்து)—நக்கென்ன-சிரித்தல்போல—வெ
ண்புல்-வெள்ளைப்பற்களது—மின்-விளங்காநின்ற— ஒளி- ஒளியை—வி
ரிக்கும்-பரப்புகின்ற— கூந்தல்-புரமயிரையுடைய—மா-குதிரையின்மே
ல்—மேற்கொண்டான்-அரசனேறினுன்—எ-று. (கருத்து) நளமகாரா
ஜன் அக்குதிரைமேலேறினுன்என்பதாம். (உஉ)

கொய்யுளைப்பரியிற்செல்லுங்குரிசில்வாண்முகத்திற்செவ்விச்
செய்யபங்கயமென்றெண்ணித் தெரிவையர்முகத்துலாய
மையரி ரந்தமைக்க ணளியினந்தொடர்ந்துவீழ
மையலங்களிற்றுவேந்தர் மலரடிப்பரவச்சென்றான்,

(இ-ள்) கொய-கொய்யப்பட்ட—உளை- கழுத்துமயிரையுடைய—பரி
யில -குதிரையில்—செல்லும்-போகாநின்ற— குரிசில்- அரசனது—வா
ள-காந்திபொருந்திய—முகத்தில்-முகத்தினில்—செவ்வி-பருவமுள்ள,
செய்யபங்கயமென்று-செந்தாமரைப்பூவென்று—எண்ணி (அதனை) நி
னைத்து—தெரிவையர் மங்கையருடைய—முகத்து - முகங்களிலே—உ
லாய-உலாவுகின்ற—ஐயரி-தஞ்சவரிகள்—பரந்த- பரவப்பெற்ற—மை-
அஞ்சனத்தையுடைய—கண்-கண்களாகிய—அளி-வண்டுகளது—இன
ம்-கூட்டமானது—தொடர்ந்து-சென்று—வீழ- விழாநிற்கவும்—மைய
லங்களிற்று-மதயானையேறலும்—வேந்தர்- அரசர்களானவர்கள்—மலர்-
தாமரைமலர்போலும்—அடி- பாதங்களை—பரவ- துதிசெய்யாநிற்கவும்,
சென்றான்-(அரசன் போயினுன்—எ-று. (கருத்து) நளமகாராஜன் அ
ரசர்களவணங்கச்சோலையிற்சென்றான்என்பதாம். (உ௩)

சுழிகொள்வாம்பரியிழிந்து ஆன்னலர்மௌலிதேய்க்குங்
கழல்களிற்கழல்கள்சேர்த்தகாட்சிமுன்வெருவித்தோற்ற
பழவிறகதளிருஞ்செய்ய தாமரைமலருமல்லி
விழைவுறுவனமென்றெண்ணி விசித்தபொற்கலசம்போன்றே,